# பணியகத்தின் சில பதிவுகள்







புனித சூசையப்பர் ஆலயம் - டொண்பொஸ்கோ இளையோர் - 06-02-2022ல்



07-03-2022ல் திருமண திருவருட்சாதன ஆயத்தம் பெற்றமைக்கான சான்றிதழ்கள் பெற்றபோது

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 10 | | 08 |
| ~ | | ~ |
| 03 | | 04 |
| ~ | | ~ |
| 1952 | | 2022 |



**அமரர். அருள் தேசவாசகன் குஞ்சு (ஜெயசீலன்)**

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்.
நாரந்தனை மண்ணை விட்டு பிரான்ஸ் மண்ணுக்கு நீர் வந்தாலும்
நாரந்தனை மண்ணில் உயிர் வாழ்கிறது உமது செயல்கள்
நாரந்தனை மக்கள் நலன்கருதி நீர் அமைத்த அமைப்புகள் எல்லாம் ஏங்கி நிற்குதையா !
நீர் வாழ்ந்து வந்த Garges-Sarcelles பங்கிலும் மேய்ப்புப் பணிக்குழுவில்
அங்கத்தவராக இருந்து பங்கு மக்களுக்கு அரிய பணிகளை ஆற்றி வந்தீர்.
மீண்டும் உம் திருமுகம் பார்க்க உம் சேவைகள் இவ்வுலகில் காத்திருக்க
காலனுக்கு உம் சேவை தேவைபோல் அழைத்துக் கொண்டானோ !
உம்மை தன்னருகில் மறைத்தும் மனங்களில் மலர்ந்திடும் எம்முயிரே
உம் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் !

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்
மருமக்கள், பாசமிகு பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள்.




# உறவுகள்

Uravukhal

சித்திரை வைகாசி ஆனி 2022

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 82

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை


ஆண்டவர்
இரக்கமும் அருளும் கொண்டவர்.
தி:பா:103

# இயேசு ஆண்டவர் உயிர்த்தார்



ஆர்ப்பரிப்போம், அகமகிழ்வோம், ஆனந்தம் கொண்டாடுவோம்

# உறவுகள்
Uravukhal

**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

திரு: என். எம் ஜெயரட்ணம்
திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா - மறையாசிரியர்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**மறையாசிரியர்:** திரு: ரி. எம். சந்தியாகு

**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique
Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org

**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பகம் பிரான்ஸ்

No 82

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்
Uravukal - Lourdes
இணையதள பதிப்பாசிரியர்

## ஆசிரியர் எண்ணம்



**அன்பர் இயேசுவின் இனிய அன்பர்களே!**
நமக்குள் இருக்கும் ஆன்மீக இருளை அகற்றியும் நம் இதயக் குகையை அடைத்திருக்கும் பாவக் கற்களை தூக்கியெறிந்தும் இயேசுவின் உயிர்ப்புக்கு சாட்சிகளாக விளங்க உயிர்ப்புப் பெருவிழா நம்மை இன்று உற்சாகப்படுத்துகிறது.

இயேசுவின் மரணம் கழுமரத்தில் முடிந்த காவியம் அல்ல... ஒரு அமர விளக்கு. மூன்றுநாள் மட்டுமே தன் வெளிச்சத்தை புதைத்து வைத்திருந்தது இந்த மரணம்.

பல மனிதர்கள் வரலாற்றில் உயர்ந்துள்ளனர். ஆனால் ஒரு சில மனிதர்களால் வரலாறே உயர்ந்துள்ளது. இந்த ஒரு சிலரில் சிறப்புக்குரியவராக விளங்குபவர் இயேசு கிறிஸ்து.

இப்படிப்பட்ட மாபெரும் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடக் காரணம், உயிர்ப்பு என்றோ நடந்த ஒரு வித்தியாசமான, வீரியமான நிகழ்ச்சி என்பதால் மட்டுமல்ல, இந்த உயிர்ப்பு நம்மில் நாளும் நடைபெற வேண்டும் என்று அழைப்பு விடுக்கவும் தான். இயேசுவின் உயிர்ப்பை கொண்டாடும் நாம் எப்படி உயிர்க்க வேண்டும் என சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் இப்பூமியின் கறைபட்ட மனிதனின் பாவச்சுமைகளை அகற்றி மனித வாழ்வை இலேசாக்கி விட்டது. பிறரின் துன்பச் சுமைகளை நாம் ஏற்கும் போது நமது துன்பங்கள் நமக்குப் பாரமாக தெரியாது. இயேசு நமது மகிழ்ச்சியை மிகுதியாக்க தம் மேல் நம் கவலைகளை சுமந்து கொண்டார். நாமும் பிறரின் துன்பச் சுமைகளை நமதாக்கும் போது நாமும் பிறரின் மகிழ்ச்சியை மிகுதியாக்குகிறோம். உயிர்த்த யேசு செய்த பணியை நமதாக்குகிறோம்.

என்னை சுமப்பதனால் இறைவா உந்தன் அன்பு குறைவதில்லை எனப்பாடும் நாம், பிறரின் வளர்ச்சிக்கு உயர்வுக்கு உற்சாகத்துக்கு வெற்றிக்கு தோள் கொடுக்க அவர்களின் கவலைகளை ஏற்க முன் வருவோம். அப்போது நமது வாழ்வும் லேசானதாகும், நமது அயலாரின் வாழ்வும் லேசாகும். வாழ்வில் எல்லாவற்றையும் லேசானதாக்கும், இறைவன் இந்த உயிர்ப்பு. பெருவிழா வழியாக நாம் சந்திக்கும் எல்லா நெருக்கடிகளையும் லேசாக்க ஆசைப்படுகிறார். இயேசுவைப்போல அயலாருக்காக வாழ நம்மை அர்ப்பணிப்போம். உறவில் நட்பில், அன்பில் உயிர்த்தெழுவோம் .

**உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்கள்**

உறவில் நிலைக்கும்...
அருட்பணி: போல் மத்தியு மதன்ராஜ். அ.ம.தி



## பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**25-06-2022 சனி**
**03-07-2022 ஞாயிறு 9 - 17 மணிவரை**
**திருமண அருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**

**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



**வளர்ந்தோருக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**சித்திரை:** சனி 23ந் திகதி - 17:30-18:30
**வைகாசி:** சனி 28ந் திகதி - 17:30-18:30
**ஆனி:** சனி 25ந் திகதி 17:30-18:30
**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

### சிறுவர்களுக்கான ஒன்று கூடல்

பெல்வில் சிற்றாலயத்தில் நேரம்: 9:00



03-04-2022
01-05-2022
05-06-2022

### விவிலிய பொது அறிவுப்போட்டி 75 பரிசு பெறுபவர்கள்

**1ம் பரிசு: திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்**
**2ம் பரிசு: திருமதி: ஜேம்ஸ் மேரி றீற்றா**

**ஏனையவர்கள்:**

1. திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்ஸ்
2. திருமதி: எம். என். எம். செல்வநாயகம்
3. தேவசகாயம் அந்தோனிமுத்து
4. திருமதி: யோண்சன் மேரி பீல்டா
5. திருமதி: றொபின் கூட் சகிலா
6. செல்வி: கிருத்திகா கிருபாகரன்
7. செல்வி: யோசவ் சியாமளா
8. திருமதி: றீற்றா செல்வரட்ணம்
9. திருமதி: டேவிட தபீசா
10. திருமதி: லோறன்ஸ் அந்தனி ஜசிந்தா
11. திருமதி: கெலன் அன்னவதி
12. செல்வி: லுசியா மேரி

**அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்**
**பணியக இயக்குனர்**

### சித்திரை - பணித்தளத் திருப்பலிகள்

**10-04-2022 - திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு**
07:45 Eglise Ste.Genivieve - Garges Sarcelle
12:30 Notre Dame de Blanc - Mesnil
12:30 Eglise St. Joseph des Nations
Goncourt – Paris

**14-04-2022 - புனித வியாழன் திருப்பலி**
18:30 NDR. Belleville – 75011 – Paris
**15- 04-2022 புனித வெள்ளி வழிபாடு**
16:00 Eglise St. Joseph – Goncourt – Paris
**16- 04-2022 பாஸ்காத் திருவிழிப்பு**
18:00 Chapelle NDR. de Belleville – 75011 - Paris
18:00 Eglise Ste.Genivieve - Garges Sarcelles

**17- 04-2022 ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா**
12:30 Notre Dame de Blanc - Mesnil
12:30 Eglise St. Joseph des Nations
Goncourt – Paris
17:00 Eglise St. Marie -Neuilly SurMarne



**24- 04-2022 - இறை இரக்கப் பெருவிழா**
**Aubervilliers**
**12:00 - Eglise St Martha - Aubervilliers**

### வைகாசி - பணித்தளத் திருப்பலிகள்

**01-05-2022 - புனித சூசையப்பர் திருவிழா**
12:30 Eglise St. Joseph – Goncourt – Paris
17:00 Eglise St Martin - Noissy Champs

**08- 05-2022 புனித பாத்திமா அன்னை திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations – Goncourt
**08- 05-2022 புனித பாத்திமா அன்னை திருவிழா**
17:00 Eglise St Marie – Neuilly sur Marne
**15- 05-2022 புனித பிலிப்பு நேரியார் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**22- 05-2022 - சார்ட் திருத்தல திருயாத்திரை**
14:30 Cathedrale Notre Dame
18 Cloitre Notre dame

### ஆனி - பணித்தளத் திருப்பலிகள்

**12-06-2022 - புனித அந்தோனியார் திருவிழா**
15:30 Eglise St. Joseph – Goncourt – Paris

**13-06-2022 - புனித அந்தோனியார் திருவிழா**
18:00 Eglise Ste.Genivieve - 95140 - Sarcelles

**19- 06-2022 கிறீஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா**
16:00 Notre Dame de France

**26- 06-2022 இயேசுவின் திரு இருதயவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

# திருக்கெழுத்து புதிர்

**போட்டி இலக்கம் 77**

**எண்ணிக்கை நூல் {1-20 அதிகாரம் வரை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | 3 | | | |
| | 4 | | | 5 | 6 | | | | |
| 7 | | | | | 8 | | | | 9 |
| | | 10 | | | | 11 | | | |
| | 12 | | | | 13 | | | | |
| | ★ | | | 14 | | | | ★ | |
| 15 | | 16 | | 17 | | | | | 18 |
| 19 | | | | | | 20 | | | |
| | | | 21 | 22 | | | | 23 | |
| 24 | | | | | | 25 | 26 | | |

**இடமிருந்து வலம்**

1) எனக்கெதிராக முறுமுறுத்த…………வயதும் அதற்கு மேலும்..
2) அவ்வாறே அவர்கள் போய்…………பாலை நிலத்தில் இருந்து..
3) உன் பக்கம் திருப்பி…………அமைதி அருள்வாராக.
4) பலிக்காக பழுதற்ற ஓராண்டு ஆட்டுக்…………ஒன்று, நல்லுறவு..
6) இருபத்தைந்து……………அதற்கு மேலுமானோர் சந்திப்புக் கூடார..
7) தரையில் இருந்து கொஞ்சம் துகள் எடுத்து நீரில் ………………
8) …….மோசே வண்டிகளையும் மாடுகளையும் பெற்று
10) ஐம்பது…………க்கும் மேலானோர் வேலையின் பணிகளிலிருந்து விலகிக் கொள்வர்.
11) முழுவதும் சந்திப்பு……….வாயிலில் உன் முன்னே
12) ……..ஒன்று கூட்ட நீ ஊதும்போது பெரும் தொனி
13) ரூபன் குலத்தில் எண்ணப்பட்டோர் நாற்பத்தாறாயிரத்து……….பேர்.
14) லேவியரின்…………………எனக்கென்று பிரித்தெடு
16) மக்கள் பயணமாகி அசரோத்துக்கு வந்து………… தங்கினர்.
17) செபுலோன் குலத்தில் இருந்து எலிபாபு. இவன் …………….. மகன்.
19) தங்கியிருந்த இடத்தில் இஸ்ராயேல்…………….. பாளையம் இறங்குவர்.
20) ஆண்டவர் உன் தொடைகள் அழுகி விழவும், உன்…………வீங்கவும்..
22) வெஞ்சினத்தின் வேளைகளில் இதுவே…………. அதாவது..
24) இரண்டு முழ அளவு உயரத்தில்…………….படி செய்தது.
26) தூயவனாயிருந்தால் அவனுக்கு ஒரு கேடும்……..

**மேலிருந்து கீழ்**

1) அப்போது மோசே சொன்னது « ஏன்………. ஆண்டவர் கட்டளையை..
9) திருவுறைவிடம் எழுதப்பட்ட……………..மேகம்..
18) திருப்பணிக்கு வரும்…………வயது முதல் ஐம்பது வயது வரையுள்ள..
19) அதாவது ஒரு……..தன் கணவனின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தும்..

**வலமிருந்து இடம்**

3) ஒளிரச் செய்து ……..மீது அருள் பொழிவாராக.
5) தரை தன் வாயை…………..க் கொண்டது. சபையிலிருந்த அவர்கள்..
8) ……..கொண்டு வந்த காணிக்கை தூயகச் செக்கேலின்படி ஒன்றரை..
10) நிலை தீட்டுப்பட்டதால் கடந்துவிட்ட காலம் கணக்கில் …………
11) அதன் எலும்பு எதையும் முறிக்கவோ…………..
14) ………குலத்திலிருந்து எல்யாசாபு. இவன் தெகுவேலின் மகன்.
16) இஸ்ராயேல் மக்கள் மீண்டும்……………..கூறியது..
18) திருப்பணிக்கு வரும்………வயது முதல் ஐம்பது வயது வரையுள்ள..
20) உன்னையோ அவர்களைவிடப் பெரியதும்………துமான இனமாக்குவேன்.
21) கூடாரத்தின் மேலிருந்த……….அகன்றதும் மிரியாமை பனி போன்ற..
25) அதை ஆண்டவர் முன்னிலையில்……….யாகக் காட்டி

**கீழிருந்து மேல்**

4) …………..இச் சட்டத்தையெல்லாம் அவளிடம் செயல்படுத்துவார்..
5) குடும்ப வாரியாக மெராரியின் புதல்வர் மக்லி,…….. ஆகியோர்
8) மேலும் நீ லேவியரை ஆரோன்,…………புதல்வர் முன் நிற்கச் செய்து
9) பணிக்கேற்ப……….வண்டிகளையும் எட்டு மாடுகளையும்
14) ……மக்களின் தலைமுறைகளில் அவர்கள் குடும்பங்கள்
15) ஆனால் ஒருவன் வேண்டுமென்றே எதையும்………… செய்தால்..
18) இரண்டாம் மாதம்…………நாளன்று அவர்கள் மக்கள் கூட்டமைப்பு..
19) திராட்சை இரசம்……….ஆசியவற்றின் காடியை அருந்தக்கூடாது.
23) என்னோடிருக்கும் காலாட்படையினர் எண்ணிக்கையோ ……………..இலட்சம்.
25) ……. தன் குற்றப்பழி அற்றவனாவான். பெண்ணோதன்

**குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-06-2022 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**



# எல்லாப் பிழைகளையும் உதிர்த்திடுவோம்

## இயேசுவோடு நாமும் உயிர்த்தெழுவோம்

அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்

**இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பின் விரைவாக நாமும் இன்று உயிர்த்தவர்களாக இருக்கின்றோம் என்று தூய பவுல் அடியார் பறைசாற்றுகின்றார். உயிர்ப்பு விழாவை மையமாக வைத்து மண்ணுலக உயிர்ப்பு மற்றும் விண்ணுலக உயிர்ப்பு பற்றி சிறிது நாம் சிந்திப்போம்.**

### மண்ணுலக உயிர்ப்பு.

விண்ணுலக உயிர்ப்பு என்பது செத்துப்பிழைத்தல் என்று பொருள். அரசன் முதல் ஆண்டி வரை ஏழை முதல் பணக்காரன் வரை ஒவ்வொரு மனிதனும் இத்தகைய உயிர்ப்பை அனுபவிக்காமல் இந்த உலகிலிருந்து உயிர் துறக்க முடியாது. காரணம் மண்ணுலக உயிர்ப்பு என்பது மனித வாழ்வின் ஓர் அங்கம்.

உணவு இல்லை என்றபோது தன்னிடம் இருக்கும் விதை நெல்லை எடுத்து விதைத்துவிட்டு அதன் விளைச்சலுக்காக பசியோடு காத்திருக்கும் விவசாயிகளின் அனுபவம், செத்துப் பிழைத்ததின் அனுபவமே. பத்து மாதம் தவமிருந்து உயிரையே பணயம் வைத்துப் தன் பிள்ளையை உலகிற்கு அறிமுகம் செய்யும் தாய்மார்களின் பிரசவ வேதனை அவர்களுக்குச் செத்துப் பிழைத்த அனுபவமே. நாம் அனைவருமே பல நேரங்களில், பல இடங்களில், பல விதங்களில் இப்படிப்பட்ட செத்துப் பிழைத்தல் அனுபவித்திருப்போம். விவிலியத்தின் பல பக்கங்களில் பார்க்கிறோம். துன்பங்கள், துயரங்கள், எதிர்காலக் கனவுகள், வேதனைகள், சாவுகள் மத்தியில் இஸ்ராயேல் மக்கள் இத்தகைய செத்துப் பிழைத்தலை அனுபவித்திருக்கிறார்கள்.

கண்ணுக்குத் தெரியாத கானான் தேசத்தைக் காணப்போகின்றோம் என்ற எண்ணத்தோடும், ஆசையோடும் சென்ற மக்களுக்கு, பார்வோன் மன்னனின் படைகளும் செங்கடலும் இடையூறாக இருந்தபோது பல துன்பங்கள் கண்ணீர்கள் மத்தியில் செங்கடலைக் கடந்த இஸ்ராயேல் மக்கள் அனுபவித்திருப்பார்கள் மண்ணுலக உயிர்ப்பு என்றால் என்னவென்று. இரத்தம் மனித உயிரின் அடையாளம் என்று கூறுகிறது லேவியர் ஆகமம் (17:14). தன்னுடைய உடலில் இருந்து பன்னிரெண்டு ஆண்டுகளாக இரத்தத்தை இழந்து வந்த அந்தப் பெண்ணுக்குத் தெரிந்திருக்கும், மண்ணுலக உயிர்ப்பு என்றால் என்னவென்று. தன் பிள்ளையை இழந்து விட்டு அழுகையோடும் அங்கலாய்ப் போடும் இருந்த குடும்பத்தினரைப் பார்த்து ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை? என்று கேட்டதோடு அல்லாமல், இந்த சிறுமியை **தலித்தாகூம்** என்று சொல்லி சிறுமியை உயிர்ப்பித்தார் இயேசு. அன்று அந்த வீட்டாருக்கு தெரிந்திருக்கும் மண்ணுலக உயிர்ப்பின் அனுபவம். ஆனால் இத்தகைய உயிர்ப்பைவிட மேலான உயிர்ப்பு நம் ஆண்டவர் இயேசுவின் விண்ணுலக உயிர்ப்பு.



### விண்ணுலக உயிர்ப்பு.

விண்ணுலக உயிர்ப்பு என்பது மண்ணுலக உயிர்ப்பைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. எனவேதான் இந்த விழாவை நாம் எல்லாவற்றிற்கும் முதன்மையான விழாவாகக் கொண்டாடுகிறோம். காரணம் பாமரப் பெண்ணுக்கு (மரியாள்) மகனாகப் பிறந்து முப்பது ஆண்டுகள் தன் தந்தையோடு தச்சு வேலை செய்து மூன்று ஆண்டுகள் பணியாற்றி, பல சவால்களை சந்தித்து, யெருசலேம் ஆலயத்தைப் பார்த்து, **இதை இடித்து தரை மட்டமாக்குங்கள் அதை நான் மூன்றே நாளில் கட்டியெழுப்புவேன்.** என்று தன் உடலையும் உயிர்ப்பையும் பற்றி சொன்னதோடு நில்லாமல் ‘ சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?’ என்றவராய் உயிர்த்தார் நம் ஆண்டவர் இயேசு. மூன்று ஆணிகளால் இயேசுவின் கதையை முடித்து விட்டோம் என்று ஆர்ப்பரித்தது கொள்ளையர் கூட்டம். ஆனால் இறப்பை இறுதிக் கட்டமாகக் கொள்ளாமல் உயிர்த்தார் இயேசு. எனவேதான் உயிர்ப்பு விழாவை எல்லாவற்றிற்கும் முதன்மையான விழாவாகக் கொண்டாடுகின்றோம்.

உயிர்ப்பு ஒரு அனுபவம் இந்த அனுபவத்தை சீடர்களும் புனித பவுலடியாரும் எம்மாவுஸ் மற்றும் தமஸ்கு நகருக்கு செல்லும் வழியில் அனுபவித்திருக்கிறார்கள். அதன் பயனாகத்தான் நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எங்களால் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது என்று புனித பேதுரு கூறுகின்றார். இத்தகைய உயிர்ப்பின் சாட்சிகளாக செயல்பட திருச்சபை நம்மை அழைக்கின்றது.

இன்று கடவுளின் உயிர்ப்பு, எம் கண்முன்னே படம் பிடித்துக் காட்டப்படவில்லை என்றாலும், நம்முடைய விவிலியமும், பாரம்பரியமும் இறைவனின் உயிர்ப்பை ஆணித்தரமாக சொல்லுகின்றது. இந்த உயிர்ப்பின் அனுபவத்தை நாம் மற்றவர்களுக்குப் பறை சாற்றவில்லையென்றால், நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையும் சீடர்கள் பறைசாற்றிய நற்செய்தியும் பொருளற்றதாக மாறிவிடும். **(1 கொரி 15 : 14).**

இயேசுவின் உயிர்ப்பை நாம் மற்றவர்களுக்குப் பறைசாற்ற, நம்முடைய வாழ்க்கையின் வழியாகவும், செயற்பாடுகள் மூலமாகவும், வார்த்தைகளின் வாயிலாகவும் அறிவிக்க வேண்டும். எனவே நாம் அன்பு, சமாதானம், ஒற்றுமை, நேர்மை, போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்போம். புலம் பெயர்ந்து வரும் அகதிகளுக்கு தஞ்சம் அளிப்போம். அநீதியை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி புரிபவர்களை எதிர்த்து நிற்போம். மனிதாபிமானத்தை நமது ஆடையாக அணிந்து கொள்வோம். பணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை தவிர்த்து இரக்கத்திற்கு இடம் கொடுப்போம்.

அன்னை திரேசாவை நம் வாழ்வின் அடிப்படையாகவும் முன்மாதிரியாகவும் கொண்டு ஏழைகள், சிறுவர்கள், சாலையோரப் பணியாளர்கள் போன்றவர்களை நம் குடும்ப வட்டத்தில் சேர்த்துக் கொள்வோம். அப்போதுதான் நாம் இயேசுவின் உயிர்ப்பை மற்றவர்களுக்கு பறைசாற்ற முடியும். சாவுக்குப் பின் மறுவாழ்வு உண்டு என்பதை நம்புவோம். இயேசுவின் உயிர்ப்பை எம் வாழ்வின் மூலம் பறைசாற்றுவோம்.

# இல்லத்தில் இறையாட்சி என்றென்றும் நல்லாட்சி

### குடும்ப ஆண்டிற்கான சிறப்புக் கவிதை

இல்லத்தில் இறையாட்சி என்றென்றும் நல்லாட்சி
இது வெறும் இலக்கென்போம் இனிதான வாழ்வென்போம்!
நல்லவற்றை நாடுவோர்க்கு நானிலமே பரிசாகும்
நம்பிடுவோம் இந்த நாளில் நல்லனவே செய்திடுவோம்!
கல்மனதைக் கடத்தி நிதம் கருணையினை அணிந்து கொண்டால்,
காசினியே உரிமையாகும் காலமெல்லாம் புகழ் மணக்கும்!
சொல்லுவதைச் செய்திடுவோம் சுகம் வந்து குடியிருக்கும்
சோர்வினைக் களைந்திடுவோம் சொர்க்கம் நம்மில் தோன்றிவிடும்!

குடும்பத்து உறவுகளும் குதுகளிக்க வாய்ப்புண்டு
கூடிச் செபிப்பதனால் கோடியின்பம் தேடிவரும்!
நடுவத்தில் வைக்கின்ற நட்பென்றும் பலனளிக்கும்
நாமொருதாய் மக்களென நயந்திங்கு வாழ்ந்திட்டால்!
கெடுதியைச் செய்பவரும் கீழிறங்கிச் சென்றிடுவார்
கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்மில் கின்னசுக் கொடை வழங்கும்!
கொடுப்பார் குறைவின்றி குணக்குன்று இயேசுபிரான்
கொடுப்போம் அவர் பெயரை குவலயம் முழுவதற்கும்!

திருத்தந்தை அறிவித்த திருக்குடும்ப ஆண்டுதனில்
தீராத பிரச்சினைகள் தீர்ந்துவிடும் உண்மை இது!
கருத்தினிலே ஒன்றுபட்டுக் காலமெல்லாம்
அருள்வாழ்வைக் கடமையெனக் கடைப்பிடித்தால்
கனிவுமிகு வாழ்வமையும்!
வருத்தமோ துயரமோ வாட்டிடும் தருணமோ
வந்திடாது என்பதனை வாழ்நாள்கள் எதிரொலிக்கும்!
புகுந்திடும் நம்வீட்டில் புனித நல் வெளிச்சங்கள்.

உயிர்ப்பினை அனுபவிக்க ஒன்று குறை என்றுணர்வோம்
உறவுகளைப் பேணுவதை உதறுதல் தவறென்போம்!
பயிர் பிழைக்க என்னாளும் பட்டத்தில் மழைவேண்டும்
பார்என்றும் சிறப்பதற்கு பண்புற்ற நிலை வேண்டும்!
தயிர்தானாய் வந்திடாது தகுந்த பணி அதுகேட்கும்
தக்க பாடம் அதுதானே தரணியில் உறவுசூழ்!
மயிர்நீப்பின் வாழாத மான்போன்ற வாழ்வுக்கு
மானமுள்ள உறவுகளே மதிப்பென்று கருதிடுவோம்!

மனந்தோறும் ஒன்றுபட்டு மணிக்கணக்காய் கலந்துபேசி
மாதரசி மரியாவின் மகனிடத்தில் வேண்டிடுவோம்!
தினந்தோறும குடும்பத்தில் தித்திக்கும் விவிலியத்தைத்
திறந்து நாம் படித்திடுவோம் தீர்ந்துவிடும் நம்குறைகள்!
சினமெல்லாம் மாறிவிடும் சீர்திருத்தம் தோன்றிவிடும்
சிங்காரக் குடும்பமாய் சிறந்தோங்கும் சிரிப்பலையாய்!
இனமென்ற ஒன்றுகூடல் இமயமாய் உயாந்து நின்றால்
இலங்கைமண் எப்போதும் இறையன்பில் நிலைத்து நிற்கும்!

மறையாசிரியர் தி. ம. சந்தியாகு,
வேங்கிடக்குளம் இந்தியா

# நம்பிக்கையை எந்த ஆயுதத்தாலும் கொலை செய்ய முடியாது

இத்தவக்காலத்தில் வாசிக்கப்படும் திருப்பலி வாசகங்கள் இயேசு கிறிஸ்துவில் நம் நம்பிக்கையைப் புதுப்பிப்பதற்கு அழைப்பு விடுக்கின்றன – கர்தினால் தாக்லே மேரி தெரேசா: வத்திக்கான் துயரங்கள் மற்றும், வேதனைகளால் நிறைந்துள்ள காலக்கட்டத்திலும்கூட, நம்பிக்கை இழக்காமல் இருக்கமுடியும் என்பதற்கு, ஐரோப்பா மற்றும், மனித சமுதாயம் ஆற்றிவரும் தோழமையுணர்வுச் செயல்கள் சான்றாக உள்ளன என்று, உலகளாவிய காரித்தாஸ் நிறுவனத்தின் தலைவர் கர்தினால் லூயிஸ் அந்தோனியோ தாக்லே அவர்கள் கூறினார்.

உக்ரைனில் இடம்பெற்று வரும் போர் குறித்து வத்திக்கான் செய்திகளுக்குப் பேட்டியளித்த, நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயத்தின் தலைவருமான கர்தினால் தாக்லே அவர்கள், எந்தவோர் ஆயுதத்தாலும் நம்பிக்கையை கொலைசெய்ய முடியாது என்பதை வலியுறுத்திக் கூறினார். குண்டுவீச்சுக்களுக்கு மத்தியில், உக்ரைன் காரித்தாஸ் மற்றும், உக்ரைன் காரித்தாஸ் Spes அமைப்புகளின் பணியாளர்கள், மக்களுக்கு ஓய்வின்றி பணியாற்றி வருகின்றனர் என்றும், உக்ரைனில் போர் தொடங்கியதிலிருந்து, ஒரு இலட்சத்து அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களுக்கு காரித்தாஸ் அமைப்புகள் உதவியுள்ளன என்றும் கர்தினால் தாக்லே அவர்கள் குறிப்பிட்டார். ஐரோப்பாவிலுள்ள அனைத்து காரித்தாஸ் அமைப்புகள், குறிப்பாக பெருமெண்ணிக்கையில் புலம்பெயர்ந்தோரை வரவேற்றுள்ள போலந்து, ருமேனியா, மோல்டோவா, ஹங்கேரி, சுலோவாக்கியா ஆகிய நாடுகளின் காரித்தாஸ் அமைப்புகள், சிறப்பான சேவைகளை ஆற்றி வருகின்றன என்றும் கர்தினால் கூறினார்.

மனித சமுதாயம் கடந்த ஈராண்டளவாக கோவிட்–19 பெருந்தொற்று பிரச்சனையை எதிர்கொண்டு வருகிறது, தற்போது உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் போர் புதியதோர் உலகப் போருக்குக் காரணமாகுமோ என்ற அச்சம் நிலவுகிறது, இச்சூழலில் நம்பிக்கையை எங்கே காண்பது என்ற கேள்விக்கும் கர்தினால் தாக்லே அவர்கள் பதிலளித்தார். கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் எப்போதும் நம்பிக்கையை கடவுள் மீது வைக்க வேண்டும். இத்தவக்காலத்தில் வாசிக்கப்படும் திருப்பலி வாசகங்கள் இயேசு கிறிஸ்துவில் நம் நம்பிக்கையைப் புதுப்பிப்பதற்கு அழைப்புவிடுக்கின்றன என்று கர்தினால் தாக்லே அவர்கள் எடுத்துரைத்தார். புலம்பெயர்ந்தோருக்கு மனிதர்கள் வெளிப்படுத்தும் நன்மைத்தனத்தில் நாம் நம்பிக்கையின் அடையாளங்களைக் காண்கிறோம் என்றும் கர்தினால் தாக்லே அவர்கள் கூறினார்.



# விவிலிய அறிவுப்போட்டி - 76




**ஆமோஸ்**

1) ஆண்டவர் சமாரியா நாட்டில் பஞ்சம் ஏற்படப் போகிறது என்கிறார். எப்படியான பஞ்சம்?
2) சமாரிய நாட்டில் எந்தத் தெய்வத்தின் பெயரால் ஆணையிடுகிறார்?
3) இஸ்ராயேலின் மறுவாழ்வு எப்படி இருக்கும் என ஆண்டவர் கூறுகிறார்?
4) எந்த நகருக்கான தண்டனைத் தீர்ப்பு மாறுவதில்லை என ஆண்டவர் கூறுகிறார்?
5) இஸ்ராயேல் வீட்டாருக்கு ஆணடவர் என்ன கூறுகிறார்?
6) ஆண்டவரின் நாள் எப்படிப்பட்டதாயிருக்கும்?
7) திருவிழாக்களையும் வழிபாடுகளையும் வெறுக்கும் ஆண்டவர் எதை விரும்புகிறார்?

**ஒபதியா**

8) இஸ்ராயேலின் வெற்றி எப்படி இருக்கும் என ஆண்டவர் கூறுகிறார்?
9) இஸ்ராயேலிலிருந்து நாடு கடத்தப்பட்ட வீரர்கள் மீண்டும் வந்து எங்கே இருப்பார்கள்?
10) யார் உனக்கு கண்ணி வைத்தார்கள் என்று குறிப்பிடுகிறார்

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் - 75

பதில்கள் (ஓசேயா நூல்)

1) பெத்தர் பேலை 10:14
2) எனக்கு அரசன் வேண்டும், தலைவன் வேண்டும். 13:10
3) கொலைக் களத்திற்கு 9:13
4) இஸ்ராயேலைக் கண்டு பிடித்தேன். 9:10
5) எரியும் அடுப்பிற்கு ஒப்பானவர்கள். 7:4
6) பொழுது விடியும்போது இஸ்ராயேல் அரசன் அழிந்து போவது உறுதி. 10:15
7) அன்பு கூர்ந்தார். எகிப்தில் இருந்து மகனை அழைத்து வந்தார். 11:1
8) நேர்மையானவை. 14:10
9) இஸ்ரயேல் விழுங்கப்பட்டாயிற்று. இப்பொழுது அவர்கள் வேற்றினத்தார் நடுவில் உதவாத பாத்திரம் போல் இருக்கின்றார்கள். தனிமையில் திரிகிற காட்டுக் கழுதைபோல் அசீரியாவைத் தேடிப் போனார்கள். 8:8-9
10) சிலை வழிபாட்டின் உயர்ந்த இடமெல்லாம் அழிக்கப்படும் முள்களும், முட்புதர்களும் அவற்றின் பலி பீடங்கள் மேல் வளரும் அப்போது அவர்கள் மலைகளை பார்த்து, ”எங்களை மூடிக்கொள்ளுங்கள்” 10:8

## இறைவார்த்தை

**எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும். (பிலிப்பியர் 4:6-7)**

# விவிலியத் தேடல்




**கடந்த காலங்களில் நாம் பழைய ஏற்பாட்டு நூல்கள் பற்றி சிறிது பார்த்தோம். இம்முறை புதிய ஏற்பாட்டு நூல்கள் பற்றி பார்ப்போம்.**

வழக்கமாக திருப்பலி வேளைகளில் வார நாட்களில் முதல் வாசகம் பழைய ஏற்பாட்டில் இருந்ததும், இரண்டாம் வாசகம் புதிய ஏற்பாட்டில் இருந்தும் (நற்செய்தி) வாசிக்கப்படுகின்றது. (சில விசேட நாட்கள் தவிர்த்து )

ஞாயிறு பெருவிழாக்களில் மூன்று வாசகங்கள். முதல் வாசகம் பழைய ஏற்பாட்டில் இருந்தும், ஏனைய இரண்டு வாசகங்களும் புதிய ஏற்பாட்டில் இருந்தும் வாசிக்கப் படுகின்றன. சில நாட்களில் மூன்று வாசகங்களும் புதிய ஏற்பாட்டில் இருந்து எடுகப்படுகின்றன.
உதாரணம்: பாஸ்காகாலம், ஞாயிறு தினங்கள் புதிய ஏற்பாட்டில் இருந்து எடுக்கப்படுகின்றன.

**புதிய ஏற்பாடு காட்டும் வரலாறு :**

* புதிய ஏற்பாடு வரலாறு திருமுழுக்கு யோவானில் தொடங்குகின்றது. இவர் இயேசுவின் வருகைக்காக மக்களை தயாரித்தார். (யோவான் 1. 19–23)
* ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பெத்தலேகேமில் பிறந்தார். (லூக்கா2. 51)
* நாசரேத்தில் தம் பெற்றோர் மரியா, யோசேப்பு ஆகியோருக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்து வந்தார் . (லூக்கா2. 51)
* முப்பது வயது நிரம்பிய போது இறையாட்சியை அறிவிக்கும் பணியை தொடங்கினார். இப் பணிக்காக சீடர்களை அழைத்து அவர்களை பயிற்றுவித்தார்(. மாற்கு 3. 14–15)
* மூன்று ஆண்டுகள் பலஸ்தீன நாடெங்கும் நற்செய்தி அறிவித்து அருங்குறிகள் பல செய்தார் . (மத்தேயு 4. 23)
* அவரை ஏற்காத யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றனர், அவரோ மரித்து மூன்றாவது நாள் உயிர்த்து எழுந்தார். (லூக்கா23. 46) (மத்தேயு 28. 6)
* உயிர்த்த நாற்பதாம் நாள் இயேசு விண்ணேற்றம் அடைந்தார் . பெந்தகோஸ் நாளில் தூய ஆவியை மரியா, திருத்தூதர்கள் மேலும் பொழிந்தருளினார். அன்று தான் திருச்சபை பிறந்தது . (திருத்தூதர் 2. 1)
* தூய ஆவியை பெற்று கொண்ட திருத்தூதர்களும் சீடர்களும் உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவித்தனர். (திருத்தூதர்பணி. 8. 4)

இதுவே புதிய ஏற்பாட்டில் நாம் காணும் மீட்பின் வரலாறு .

**இயேசுவின் காலத்தில் பலஸ்தீன் நாடு.**

இயேசுவின் காலத்தில் பலஸ்தீன் நாடு நாம் வாழும் ஆசியா கண்டத்தின் மேற்கு பகுதியில் இருந்து பரப்பளவில் மிக சிறியது. தெற்கு வடக்காக "பெயர் செபா"முதல் தான் வரையிலும் கிழக்கில் சாக்கடலையும் மேற்கில் மத்திய தரைக்கடலையும் எல்லையாக கொண்டது. இந் நாடு யூதேயா சமாரியா கலிலேயா மூன்று மாவட்டங்களை கொண்டது. இந் நாட்டின் வடபகுதியில் உற்பத்தியாகும் யோர்தான் நதி கலிலேயாக் கடலின் வழியாகச் சென்று சாக்கடலில் கலக்கிறது. சாக்கடலுக்கு மேற்கே உள்ள சீமோன், ஒபெல் போன்ற குன்றுகள் மீது எருசலேம் நகர் அமைகிறது .

தொடரும் ..............

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 76
## வெற்றியாளர்கள்



### லேவியர் நூல் (1-20)

1) **திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா**
2) **செல்வி: சியாமளா யோசவ்**
3) **திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்ஸ்**

1) திருமதி: ரொபின் கூட் சகிலா
2) திருமதி: எம். என். எம். செல்வநாயகம்
3) திரு: அருளப்பு கிறிஸ்ரியன்
4) திருமதி: பிறிம்றோஸ் டலஸ்
5) செல்வி: டேவிட் தபீசா
6) திருமதி: றீற்ரா செல்வரட்ணம்
5) திருமதி: யோசவ் அன்னவதி
9) திருமதி: தியோதிமஸ் யூக்கலிஸ்ரா

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 76
## சரியான பதில்கள்

**லேவியர் 1:20**

**இடமிருந்து வலம்**

1 ஆரோன் 8:30
2 திருநிலைப் 2:12
3 தமக்கு 8:4
5 ஒரு 13:40
6 மாறா 10:9
7 காகம் 11:14
12 ஊற்று 15:13
15 கழுகு 11:13
16 குருவி 14:59
17 தலைமுறை 10:9
18 குருதி 14:19
19 தன் 14:16
20 தேன் 2:11
21 கட்டை 2:7
22 பாலம் 5:6
23 சிறு 3:4
25 தூயது 7:6
28 ஆரோனும் 8:14

**வலமிருந்து இடம்**

2. திருமுன்
8. பாவம் 16:5
11. கைகளை 8:14
13. தேமல் 13:39
14. நியம 10:9
17. தம் 11:28
19. தலைமேல் 3:13
27. நீக்கம் 12:8
29 தம் 14:28

**மேலிருந்து கீழ்**

1. ஆடு 7:22
2. திராட்சை 10:8
5. காலால் 11:42
7. ஒத்ததே 15:26
8. பானக 8:9
11 கை நிறைய 9:17
18. குற்றம் 14:12
24. ஆணை 5:4

**கீழிருந்து மேல்**

4. குரு 6:10
5. ஒரு 10:14
6. மாலை 13:31
9. பாவக் 16:17
10. கொக்கு 11:19
12. ஊர் 7:21
16. குற்றம் 14:12
19. தலை 13:44
26. மூடிய 3:14
27. நீங்கள் 14:33
28. ஆட்டை 5:6

## புனிதர் கூட்டத்தில் இணையும் புனிதர்கள்





நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 15–மே –2022 அன்று நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த அருளாளர் உட்பட பத்து அருளாளர்களுக்கு, ரோமை வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் வைத்து புனிதர் பட்டம் அளித்து பீட வணக்கத்திற்கு உயர்த்துகிறார்.

அருளாளர் டைடஸ் பிரேண்ட்ஸ்மா
அருளாளர் மேரி ரிவியர்
அருளாளர் மரியா டி ஜீசஸ்
அருளாளர் சார்லஸ் டி பௌகால்ட்
அருளாளர் சீசர் டி பஸ்
அருளாளர் லூயிஜி மரியா பலஸோலோ
அருளாளர் கியுஸ்டினோ ரஸ்ஸோலிலோ
அருளாளர் அன்னா மரியா ரூபாட்டோ
அருளாளர் டோமினிகா மண்டோவணி
அருளாளர் தேவசகாயம் பிள்ளை (தமிழ்நாடு)

**புதிதாக புனிதர் கூட்டத்தில் இணையும் புனிதர்களே! பாவிகள் எங்களுக்காக, இறைவனை மன்றாடுங்கள்.**

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 2022



1. இயேசு பாலைநிலத்திற்கு யாரால் அழைத்துச் செல்லப்பட்டார்?
2. இயேசு பாலைநிலத்தில் எவ்வளவு காலம் நோன்பு இருந்தார்?
3. திருமுழுக்கு பெற்றபின் இயேசுவை தூய ஆவி எங்கு அழைத்து சென்றார் ?
4. நோன்பிருந்த பின் இயேசு என்ன செய்தார் ?
5. பாலைநிலத்தில் இயேசு பசியுற்றிருந்த வேளை ஏற்பட்ட முதலாவது சோதனை யாது?
6. அலகையின் சோதனையை வெற்றி கொண்ட பின் இயேசுவுக்கு என்ன நடந்தது ?
7. திருமுழுக்கு யோவான் கைது செய்யப்பட்டதை அறிந்து இயேசு எங்கு சென்றார் ?
8. செபுலோன், நப்தலி ஆகிய இடங்களின் எல்லையில் கடலோரமாய் அமைந்திருந்த இடம் எது?
9. இயேசு போதித்த போதனையின் மையம் யாது?
10. இயேசு கலிலேயக் கடலோரமாய் அழைத்த முதல் சீடர்கள் யாவர்?

## HiStoiRe

Il y a deux mille ans , un disciple dit a Jésus :
- " Seigneur, pourquoi avoir donné des oreilles aux gens puis qu'ils n'écoutent pas ? "
Le Seigneur lui répondit :
- " Tu verras en 2020, quand j'aurais envoyé une grande pandémie frapper le monde alors...
Le disciple l'interrompit et dit:
- " alors ils écouteront ? "
- " Non, lui dit le Seigneur, alors leurs oreilles leur serviront pour retenir leurs masques ! "





## மன்னிப்போம் மறப்போம்
## அன்பை நாம் வளர்ப்போம்

மனித வாழ்விலே ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு கடந்து செல்லுதல் என்பது, ஒரு மகத்தான செயற்பாடு. எனது மகன் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து மேற்படிப்பிற்காக பல்கலைக்கழகத்திற்கு செல்கிறான் என்று சொல்லும்போது, அவன் எடுத்து வைப்பது என்னவோ ஒரு படிக்கல்தான். ஆனால் அவன் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு கடந்து வருவதற்கு எடுத்துக் கொண்ட காலம், பல வருடம் என்பதை மறந்து விடுகிறோம். அந்த பல வருடத்திலே எத்தனை சோதனைகள், எத்தனை வேதனைகள் அனைத்தையும் சாதனைகளாக மாற்றி, அதைக் கடந்து வரும் பொழுது கிடைக்கும் மகிழ்ச்சி அளவிட முடியாத ஒன்று. சிந்தித்துப் பார்த்தால் இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு படைப்பும் கடந்து செல்வதற்கு எத்தனை சோதனைகளையும் வேதனைகளை யும் தாங்க வேண்டியிருக்கிறது. சாதாரண கல் சிலையாக மாறுவதற்கு ஆயுதங்களால் எத்தனை தாக்குதல்கள். ஒரு மூங்கில் புல்லாங்குழலாக மாறுவதற்கு எத்தனை வேதனைகள் அதன் வாழ்க்கையில். ஆக கடந்து செல்லுதல் என்பது இன்றைய நிலையைப் பொறுத்த வரையில் கடினமான செய்திதான். கடந்துவிட்டோம் என்றால் அதைவிடக் களிப்பான விசயம் எதுவுமில்லை.

கடவுளை நீ அன்பு செய்கிறாய் மகிழ்ச்சி. உன்னை நீ அன்பு செய்கிறாய் மிக்க மகிழ்ச்சி. உனக்கு அடுத்திருப்பவரை அன்பு செய்கிறாய் மிக மிக மகிழ்ச்சி. எங்கோ பூகம்பம் என்றால் யார் என்று தெரியாதவர்களுக்கு கூட அன்பை வெளிப்படுத்துகிறாய் இரட்டிப்பு மகிழ்ச்சி. ஆனால் உன் பகைவருக்கு அன்பு செலுத்து என்று சொன்னால் மட்டும் கசப்பாக இருக்கிறது. எப்படி பகைவனை அன்பு செய்வது? இதுதான் இன்றைய மனிதர்களின் புலம்பல். பகைவருக்கு அன்பு செலுத்து. கேட்பதற்கே கேலியாக இருக்கிறதே. பகை என்று வந்த பிறகு, அன்பு என்பதற்கு அங்கே அர்த்தமில்லையே.

முரண்பாடான, ஆனால் வாழ்க்கையின் ஆழத்தை உணரச் செய்யும், உணர்வில் கலந்த வார்த்தைகளைச் சிந்தித்துப் பார்த்தால், கிறிஸ்தவத்தின் மையப் புள்ளியும் சகாப்தமும் இந்த வார்த்தையிலே அடங்கிவிடும். “ மன்னிக்கத் தெரிந்த உள்ளம் மாணிக்கக் கோவிலப்பா” என்று கவிஞர் கண்ணதாசன் கூறுவார். மானிடமகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து ஒதுக்கி, நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளிவிடும் போது நீங்கள் பேறுபெற்றோர். **(லூாக் 6:22)** உண்மைதான் நீங்கள் இகழப்படுவதால் அல்ல, மாறாக இகழ்ச்சிப்படுத்துபவரை மன்னிப்பதால்தான் பேறு பெற்றவர்கள் என்பதை, மறைமுகமாக விளக்குகின்றார் நம் ஆண்டவர் இயேசு. ஆக பகைமை என்ற சொல்லுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றால், அன்பும் மன்னிப்பும் கலந்த கலவையாக மாற வேண்டும்.

### பகைமை என்பதை நினைக்கத்தூண்டுவது எது?

நாம் எதுவாக மாற வேண்டுமென்று நினைக்கின்றோமோ, அதுவாக மாறுவோம் என்பது, அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கனின் மந்திரவார்த்தை. “ அதிபராக வேண்டும் என எண்ணினேன் அதுவாக மாறினேன்” என்றாராம். தான் ஒரு சமூக சேவகியாக வேண்டும் என்ற எண்ணம் இல்லையெனில், அன்னை திரேசா அகிலம் போற்றும் அளவுக்கு உருவாகி இருக்க முடியுமா? ஈழத்தமிழர்களின் வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும் என்ற எண்ணம் இல்லையெனில், தேசியத் தலைவர் பிரபாகரன் தான் உருவாகி இருக்க முடியுமா? ஒரு தனி மனிதனின் எண்ணங்கள் தான் அவனை வாழ வைக்கும். அதே சமயம் வீழவும் வைக்கும். ஆக நம்முடைய எண்ணங்களும், சிந்தனைகளும் தொலை நோக்குப் பார்வையோடு இருந்தால், பகைமை என்பது அழியும். அன்பு என்பது மலரும்.

அன்பு வாழ்க்கை வாழும்போது, நாம் விண்ணகத்தை சார்ந்தவர்களாக இருப்போம். உங்களை துன்புறுத்து வோருக்காக ஆசி கூறுங்கள். ஆம், ஆசி கூறுங்கள் சபிக்க வேண்டாம். **(உரோ 12:14)** என தூய பவுல் அடியார் கூறுவார். பிறரைச் சபிக்கும் பொழுது எதிர்மறை எண்ணங்கள் நம்மில் தலை தூக்கும். பகைமை என்பது மேலோங்கி நிற்கும். உறவுகளில் விரிசல் மேலும் அதிகரிக்கும். அன்பு என்பது வாடிய மலரைப் போல் வருந்தி நிற்கும். புத்தர் தன்னுடைய சொற்பொழிவிலே அருமையாகச் சொல்லுவார். “ எண்ணங்களின் விளை பொருளே மனிதன்” ஜப்பான் நாட்டிலே எல்லாத் தொழில் நுட்ப மையங்களிலும் ஒரு அறிவிப்புப் பலகை இருக்கும். அதிலே பொறிக்கப்பட்டுள்ள வார்த்தைகள்: **ஒவ்வொருவரும் தன்னுடைய எண்ண அலைகளுக்குள்ளே ஓட விடுவதன் பயன் தான் நம் நாட்டின் முன்னேற்றதிற்குக் காரணம்** என்பதாகும். ஜப்பானியர்கள் வார்த்தைகளை எண்ணங்களாக்கி வளர்ச்சியைக் கற்றுக் கொடுக்கிறார்கள். வாழும் பொழுது இப்பேற்பட்ட எண்ணங்களைக் கொண்டு வாழ்ந்தாலே போதும். அன்பு மட்டுமல்ல, அகிலத்தை ஆய்ந்தறியும் சக்தியும் நமக்குக் கிடைக்கும்.

### படைத்தவரின் எண்ண அலைகள்

தன்னுடைய வாழ்விலே அன்பை மலரச் செய்து, பகைமையை வேரறுத்து உலகம் முழுவதும் அமைதியை உதயமாக்கியவர், நம் ஆண்டவர் இயேசு. தொடக்க நூல், முதல் அதிகாரத்திலே ஒவ்வொரு படைப்பையும் படைத்த பின்பு, அவற்றை நல்லது எனக் காணவைத்தது, அவருடைய எண்ணங்கள். ஒவ்வொரு முறையும் அவர் புதுமைகளைச் செய்யும்போது குணப்படுத்துபவரின் எண்ணங்களை அறிய, நீ விரும்புகிறாயா? என்று விசுவாசத்தை மையப்படுத்தி இருந்தாலும், விசுவசிப்பவர்களின் எண்ணங்களை வெளிக்கொணர அவர் எழுப்பும் கேள்வி அவர்களுக்கு மட்டுமல்ல, அன்பை மறந்து பகைமையை வளர்த்து உறவிலே விரிசல்களை ஏற்படுத்தும் ஒவ்வொரு மனிதனுக்கும் இக்கேள்வி ஒரு சவுக்கடி. “ தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்.” என்ற எண்ணம்தான் பகைவரையும் பங்காளியாக்கியது. பகைமை என்பதை வாடச் செய்ய, அன்பு என்பதை வளரச் செய்ய நாம் முயல வேண்டும்.

எமது அன்றாட வாழ்க்கையிலே சிந்தித்துப் பார்ப்போம். நான் என்னுடைய அர்த்தமில்லாத எண்ணங்களால் எத்தனை பகைவர்களை என் வாழ்நாளில் சம்பாதித்திருக்கிறேன்? அவர்களை மன்னிக்க இப்பொழுது தயாராக இருக்கின்றேனா? தன்னைச் சுட்ட அலியாக்காவை மன்னித்து அன்பு செய்த திருத்தந்தை தூய ஜோன் போல் எங்கே? நாம் எங்கே?

**வாழ்வு என்பது இறைவன் வரைந்த ஓவியம்!**
**வாழ்க்கை என்பது மனிதன் படைக்கும் காவியம்!!**
**எனவே மன்னிப்போம் மறப்போம், அன்பை நாம் வளர்ப்போம்!!!**

**அம்பறோஸ் பீற்றர்**

# இறை இரக்கம்



திருமதி: லதா ரூபன்

**இறை இரக்கம் (தொடர்ச்சி)**

**இறைஇரக்க பக்தியும் வளர்ச்சியும் :**

Sr.Fawostina வின் மரணத்தின் பின் (05–10–1938) Vilniue பகுதியில் இறைஇரக்க பக்தி பரவத்தொடங்கியது. இவரின் சபை சகோதரிகள் நடாத்தினார்கள். இவரினால் தயாரிக்கப்பட்ட செபப்புத்தகம் என்பதை தெரியாமல் Sr.Fawostina வின் ஆன்மீக தந்தை Fr.sSopocko புத்தக உருவத்தில் வடிவமைத்தார். இது பற்றி இச் சபை முதல்வர்: Mothermichael mora-czwwskg 1941 இல் பகிரங்கமாக கூறியுள்ளார் .

இப்பகுதி முயற்சியானது Poland நாட்டிலும் அதிகம் பரவியும் பிற நாடுகளில் 2ம்உலக யுத்தம் நடைபெற்ற காலத்தில் இராணுவ வீரர்களால் பரவியதாக குறிப்பிடுகிறார்கள். 1959 பங்குனி 6 ம் திகதி வரை Sr.Fawostina வின் வாழ்க்கை முறை பக்தி முயற்சிகள் செயல்பாடுகள் பற்றிய ஆராய்ச்சி வேலைகள் முடிவடையாதபடியால் இப்பக்தி முயற்சி பரவுவதை "HOLY SEE" பரிசுத்த பீடம் சற்று தடை செய்தது. ஆனால் LAGIEWNIKI நாட்டில் உள்ள "OUR LADY OF MERCY"கன்னியர் சபை அவப்பகுதி போராயர் அனுமதியுடன் இறை இரக்க பக்தி முயற்சியையும், முன்னர் வெளியிட்ட இறை இரக்க படத்தையும் வெளியிட்டனர்.

**புனித FOWSTINA வும் பாப்பரசர் JOHNPAUL – 2**

பாப்பரசர் Johnpaul-2 படிக்கும் காலத்தில் நண்பராய் இருந்தவர் இப்போ ANDREW DESKUR. இவருக்கு Sr.Fowstina பற்றியும், கடவுள் காட்சி கொடுத்த இறை இரக்க பக்தி முயற்சி செயற்பாடுகள் பரவிய விதம் பற்றியும் நன்கு தெரிந்தவர். அதே சமயம் Karol wojtyla என்பவர் Sr.Fowstina வின் கன்னியர் மட அருகில் உள்ள ஆலையில் பணி புரிந்தார். பின்னர் குருவாகி ஆயராகி Sr.Fowstina இருந்த மடத்தில் ஆன்மீக காரியங்களில் ஈடுபட்டார். பின்னர் பேராயரானார்.

2ம் வத்திகான் பொது ஒன்று கூடலில் இப்பேராயர் karol wojtyla கருதினால் OTTAVIAWI யிடம் போலாந்து நாட்டு மக்கள் Sr.Fowstina வில் வைத்து இருக்கும் நம்பிக்கையையும் அவர் பற்றிய முழு விபரங்களையும் தெரிந்து அனைவரிடமும் இருந்து அவரின் பக்தி முயற்சிகள். கடவுள் காட்சி கொடுத்தது போன்ற முழு விபரங்களையும் ஆதாரபூர்வமாக உறுதி பத்திரங்கள் சேகரிக்கும் படி கேட்டுள்ளனர். இத்தகைய பேராயர் karol wojtyla இக்கன்னியர் மடம் அமைந்துள்ள பகுதி ஆயரிடம் உறுதி பத்திரங்கள் சேகரிக்கும் பொறுப்பை ஒப்படைத்தார், புனித பட்டம் சம்மந்தமான வேலைகளுக்கு ஆயர் JKLLAN GROBILICKI ஐ நியமித்தார்கள். Sr.Fowstina வின் வாழ்க்கை வரலாறு, பக்தி முயற்சிகள், கடவுளின் காட்சி பற்றிய உறுதி பத்திரங்கள் புரட்டாதி 1967 வரை சேகரிக்கப்பட்டு தை 1968 இல் புனிதர் பட்டம் சம்மந்தமான ஆராச்சி வேலைகள் ஆரம்பமாகியது.

**தடைக்கல்**

இப்பக்தி முயற்சிக்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை. "பரிசுத்த பீடத்தின்" "Holy SEE " யின் ஆராட்சி வேலைகள் முடிவடையவில்லை. அவர்களின் அங்கீகாரம் இல்லையென காரணம் காட்டி தடை செய்யுமாறு போலந்து நாட்டில் இருந்தும், அப்பகுதி சில ஆயர்களிடமிருந்தும் முறைப்பாடுகள் 1959 ஆண்டு பங்குனி 6 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்றது. இதற்கமைய அன்றிலிருந்து இப்பக்தி முயற்சியை பரிசுத்த பீடம் தடை செய்தது. மீண்டும் இப்பக்தி முயற்சியை Sr. Faustina வாழ்க்கை முறை, தவவாழ்வு, கடவுளின் காட்சி போன்ற விடயங்கள் முழுமையாக 4 பரிசுத்த பீடத்தினால் ஆராயப்பட்டு, Congregation for the doctrine of faith வேத விசுவாசத்திற்கான பரிசுத்த சபை" 1978 சித்திரை 15 ம் திகதி ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதில் 06.03.1959 இல் ஆராட்சி வேலைகள் முடிவுறாத பட்சத்தில் அவ் அறிக்கை தவறானது எனவும் செல்லுபடியற்றது என்றும் அறிவித்தார்கள். இதன் பிரகாரம் 1980 ஆம் ஆண்டு கார்த்திகை 30 ஆம் திகதி ஆகமன காலத்தின் 1 ஆம் ஞாயிறு பாப்பரசர் ஜோன் போல் II தனது பரப்புரை சுற்றுமடலில் "Dives in misericoria" வில் இறை இரக்கம் பற்றியும் Sr. Faustina வின் இறை இரக்க பக்தி முயற்சியும் பற்றி பிரதானமாக குறிப்பிட்டுள்ளார்.

பக்தி முயற்சி மீண்டும் தொடரும் ....






# புதிர் தோட்டம் 82

1. நம்மிடம் பிறந்த சித்திரம் நம்மையே தொடர்ந்த சித்திரம்.
2. ஒரு சாண் குட்டையில் ஒரு முழவால்.
3. சங்கீதம் பாடும், சல்லாபம் செய்யும். சமயம் பார்த்து ரத்தம் குடிக்கும்.
4. தீப்பொறி பறக்கிறது, எரியாது, பிடித்தால் இருக்கும். பிடிக்காவிட்டால் பறக்கும்.
5. பார்த்தால் பார்க்கும் சிரித்தால் சிரிக்கும், குத்திப் பார்த்தால் சிதறிப் போகும்.
6. நீலச்சுழி கொண்டான். நீருக்குள் மாள்வான்
7.உயர்ந்த வீட்டில் இருக்கும். ஊரார் தாகம் தீர்க்கும்
8.முதுகு மேல் இருப்பது கூடு. அது முத்தம்மாளுக்கு வீடு
9. கிளை இல்லாத மரம் வெட்ட வெட்ட வளரும்
10. அண்ணன் தம்பி இரண்டு பேர். அவர்களைச் சுற்றி பன்னிரண்டு பேர்.

## புதிர் தோட்ட விடைகள் 81

1. உழுந்து.
2. பலூன்.
3. விண்மீன்கள்.
4. ரத்தம்.
5. தாமரை இலை.
6. காற்றாடி.
7. காளான்.
8. கடல்.
9. சொந்தம்.
10. கண்ணாடி.

## உறவுகள் 81க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1) மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது.
2) இறைவாக்கினர் எசாயா.
3) ஒட்டக முடியிலான ஆடை
4) பரிசேயர், சதுசேயர்.
5) தூய ஆவி எனும் நெருப்பால்.
6) கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரை அணையா நெருப்பிட்டு சுட்டெரிப்பார்.
7) வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும்.
8) யோர்தான் ஆற்றில்.
9) திருமுழுக்கு யோவானிடம்.
10) " எனக்குப் பின் ஒருவர் வருகிறார், அவர் என்னை விட வலிமையுள்ளவர், அவருடைய மிதியடிகளைத் தூக்கிச் செல்லக்கூட எனக்குத் தகுதியில்லை. "

# தூய நற்கருணை



**திராட்சை இரச கிண்ணம்:**

திராட்சை இரசம் மகிழ்ச்சியைக் குறிக்கும் அடையாளமாக யூத சமுதாயத்தில் விளங்கியது. பாஸ்கா சடங்கு நிகழ்ச்சியில் நான்கு முறை கிண்ணத்தை ஏந்தி, மகிழ்ச்சியோடு இரசம் அருந்துகின்றனர்.

**முதலில்** அனைவரும் கூடி இருக்கும் மகிழ்ச்சியைக் காட்டும் விதமாக, அப்பம் பிடுகின்ற நேரத்தில் திராட்சை இரசத்தையும் பருகுகின்றனர்.

**இரண்டாவதாக:** பாஸ்கா அறிக்கை செய்தபின் இறைவனின் மேல் உள்ள நம்பிக்கையைத் தெரிவிக்கும் வண்ணம் இரசம் அருந்துகின்றனர்.

**மூன்றாவது:** உணவு அருந்திய பின் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இரசம் அருந்துகின்றனர்.

**நான்காவது** கிண்ணம் இறுதியாக வரவிருக்கும் மெசியாவை வரவேற்கும் வகையில் எதிர்பார்ப்பின் கிண்ணமாக அது அமைகிறது.

முதல் கிண்ண திராட்சை இரசம் அருந்தியபின் பாஸ்கா அறிக்கை நடைபெறுகிறது. வீட்டில் உள்ள சிறுவன் தந்தையிடம் ஏன் கூடியிருக்கிறோம் என்ற கேள்வியைக் கேட்கிறான். தந்தை விடுதலைப் பயணத்திலிருந்து தொடங்கி இஸ்ராயல் மக்கள் வாழ்வில் யாவே கடவுள் செய்த அத்தனை அரும்பெருஞ் செயல்களையும் வரிசைப்படுத்துகிறார். இந்த பாஸ்கா அறிக்கையில், அன்றைய வாழ்வில் இறைவன் செய்துவரும் பெருஞ்செயல்களும் நினைவுகூறப்படுகின்றன. இந்தப் பாஸ்கா அறிக்கை பல்வேறு பாடங்களாகவும் – இலக்கியங்களாவும் மக்கள் வாழ்வில் நின்று நிலைத்தன.


இறைச்சியை கசப்பாக கீரைகளோடு உண்பது அவர்களது முக்கிய உணவு. எகிப்து நாட்டில் தாங்கள் பட்ட வேதனைகள் பாலைவனத்தில் உணவு இன்றி தாங்கள் பட்ட துன்பங்கள் ஆகியவை முக்கிய உணவின் போது நினைவு கூறப்பட்டது. இறைவனின் கைவண்ணம் சிறப்பாக நினைவு கூறப்பட்டு நன்றி உணர்வை ஏற்படுத்தும் சிறப்பை இந்த நிகழ்ச்சியும் உருவாக்கியது.

இறைவனின் செயல்களுக்கு நன்றியாக புகழ்ச்சித் திருப்பாடல்களைப் பாடுவது (திரு. பா. 113–118) அவர்களது பாஸ்கா திருச்சடங்கின் முக்கிய செயல். பாஸ்கா அறிக்கை முடிவிலும் உணவு முடிந்த பின்பும் இந்தப் பாடல்களைப் பாடினர். இவை நன்றி உணர்வை வெளிப்படுத்தின.

தொடரும்



# சலேத் மாதா வரலாறு




## (La Salette) சலேத் (தொடர்ச்சி)

அந்த ஒளியில் ஓர் அழகிய இளம்பெண் நாங்கள் கற்களால் செய்த பாரடைஸ் மீது அமர்ந்திருந்தார். அவருடைய தலை அவரது உள்ளங்கைகளில் பொதிந்திருந்தது.

அவர் மீளாத துயரில் இருப்பது போல, ஆற்ற இயலாத வருத்தம் அவரை ஆட்கொண்டு இருப்பது போல எனக்குத் தோன்றியது. முகத்தை உள்ளங்கைகளில் பொதித்திருந்த அவர், அவருடைய இரண்டு முழங்கைகளையும் அவரது முட்டியில் வைத்திருந்தார். உடனே அந்தக் கற்களாலான இருக்கையிலிருந்து எழுந்து என்னையும் மேக்சிமினையும் கை நீட்டி அழைத்து, எங்களைப் பார்த்து "வாருங்கள் குழந்தைகளே, பயப்படாதீர்கள்... உங்களுக்கு மாபெரும் நற்செய்தியை அறிவிக்கவே நான் இங்கு வந்தேன் " என்றார்.

மாதா சுமார் 50 அடி தூரத்தில் நின்று எங்களைக் கை நீட்டி அழைத்தார். அவருடைய குரல் ஒரு மெல்லிய இசையைப் போல அவ்வளவு இனிமையாக இருந்தது. அவருடைய ஆடை அவ்வளவு வெண்மையாக இருந்தது. அவருடைய முகம் தெய்வீக அம்சமாக இருந்தது. ஆகவே நாங்கள் அவருக்கு அருகில் சென்றோம். மாதா மிக உயரமாக இருந்தார். அவர் இடையில் இன்னொரு மேலாடையைக் கட்டி இருந்தார். அந்த ஆடையின் நூலிழைகள் பூமியைச் சார்ந்ததாகத் தெரியவில்லை. அவருடைய தோள், கரங்களைச் சுற்றி மேலாடை இருந்தது . அது அவர் கழுத்துப் பக்கம் முடிச்சு போடப்பட்டு இருந்தது

அவருடைய கழுத்தில் சிலுவையுடன் கூடிய சங்கிலி ஒன்றும் தொங்கியது . அந்தச் சிலுவையின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு கருவிகள் இருந்தன. ஒரு பக்கம் சுத்தியலும், இன்னொரு பக்கம் குறடும் இருந்தன. அவருடைய தோளை இறுக்குவது போல் ஒரு சங்கிலியும் இருந்தது. அது நம்முடைய பாவங்களின் சுமையால் அவருடைய தோளை நெருக்குவது போல் இருந்தது . ஏறக்குறைய அப்பகுதி சாமானியப் பெண்ணின் ஆடையைப் போலவே அவரது ஆடை இருந்தது.

ஆனால் அவருடைய கண்களில் இருந்து அழுகை வந்து கொண்டே இருந்தது. அது அருவி போல் நிற்காமல் ஒடிக் கொண்டே இருந்தது. மேக்சிமினின் வார்த்தைகளில் கூறுவது என்றால் " மாதா ஒரு தாயைப் போல இருந்தார். சொந்தக் குழந்தைகளே அடித்ததால், அவர்களிடமிருந்து தப்பித்து மலைக்கு வந்து கதறி அழும் ஒரு எளிய தாயைப் போல இருந்தார் "

மூன்று இடங்களில் அவர் ரோஜா மாலையை அணிந்திருந்தார். தலை மேல் சாதாரண விவசாய பெண்களைப் போல ஒரு இறுக்கமான தொப்பியும், அதன் மேல் கிரீடமும் இருந்தது. அந்தக் கிரீடத்தைச் சுற்றி ஒரு ரோஜா மாலையும், அவருடைய தோள், மார்பு இவற்றை மறைத்திருந்த மேலாடையின் விளிம்பைச் சுற்றி பலவண்ணத்தில் ரோஜா மாலையும், அவரது கால் பூட்சுகளில் இன்னொரு ரோஜா மாலையும் சுற்றப்பட்டிருந்தது. அரசிகள் அணிவது போன்ற தங்க, வைரங்களால் ஆன கிரீடம் அவர் தலையில் அணிந்திருந்தார். அது ஒளி வெள்ளத்தில் கண்களைக் கூசியது. அதுவும் ரோஜாப்பூக்களால் அழகு செய்யப்பட்டு இருந்தது . அவருடைய தலையும் காதுகளும் முழுவதுமாக மறைக்கப்பட்டு இருந்தன .

ஆனால் அவர் அழுது கொண்டே இருந்தார். அவர் முகம் தெய்வீக அழகில் ஒளிர்ந்தது . ஆனால் மீளாத துயரம் அவர் முகத்தில் தெரிந்தது. மாதாவின் காட்சியால் மெலானியும் மேக்சிமினும் அதிர்ந்து போய் நின்றார்கள். "வாருங்கள் குழந்தைகளே ! உங்களுக்கு மாபெரும் செய்தியை அறிவிக்கவே வந்திருக்கிறேன் என்று கூறிய அவரது மென்மையான சொற்கள், மெலானியை மிகவும் ஈர்த்தது. மாதாவுக்கு அருகில் சென்றவுடன் மெலானி அவர் முன்பாக வலது பக்கம் நின்று கொண்டாள். அவர் முதலில் பிரெஞ்சு மொழியிலும் பின் உள்ளூர் மொழியிலும் பேச ஆரம்பித்தார்.

"என்னுடைய மக்கள் மனம் மாறி தங்களையே கடவுளிடம் ஒப்புவிக்காவிடில், நான் சிலுவையில் தொங்கும் என்னுடைய மகனின் கரங்களை இறக்கிக் கொள்ளச் செய்வேன். அது மிகப் பாரமாகவும், சுமையாகவும் எனக்கு இருக்கிறது. இனி ஒரு போதும் அதைத் தாங்கிக் கொள்ள இயலாது.

உங்களுக்காகவே நான் காலம் முழுதும் துன்பப்படுகிறேன் . என்னுடைய மகன் உங்களைக் கைவிட்டுவிட நான் விரும்பவில்லை எனில், அந்தச் சுமையை நான் சுமக்க வேண்டும். அதற்காக நீங்கள் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். உங்களில் ஒரு சிலரே இதைப் பற்றி சிந்திக்கிறீர்கள். நீங்கள் ஜெபிப்பது வீண். நீங்கள் செயல்படுவது வீண், உங்கள் அனைவருக்காகவும் நான் படும் துயரங்களை நீங்கள் ஒரு போதும் ஈடு செய்ய இயலாது .

தொடரும் மறு இதழில்.....






# இளையோர் வாழ்வில் ஏற்புடைமை!

வேதியர் பேரா. தீ. ம. சத்தியராசு வேங்கிடக்குளம், இந்தியா

## ஏற்புடைமையா அது என்ன?

அன்று மகளிர் தினம். அன்பானந்தா கல்லூரி வளாகமே ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியது. காரணம் கண்கவர் கலை நிகழ்வுகள்! செவிக்குணவூட்டும் சிந்தனைச் சொற்பொழிவுகள்! அதிலும் விரிவுரையாளர் வெற்றிச் செல்வன் 'ஏற்புடைமை' என்ற பொருளில் பேசிய பேருரை, அக்கல்லூரியின் வரலாற்றில் 'மைல் கல்' லாகப் பதிவு பெற்றது. சுருக்கமாகக் கூறவேண்டுமெனில், ஏற்புடைமை என்பது 'விதிகள் ஏதும் இல்லாமல், விருப்பு வெறுப்பு என்ற முன்சார்பு எண்ணத்திற்கு அப்பாற்பட்டு, பால், காலம், இடம், கடந்து தனக்கு தரப்பட்டுள்ள சவால் நிறைந்த தன்னிகரற்ற வாய்ப்புச் சூழல் ஆகும், என்று கூறி தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டது, அனைவரையும் சிந்திக்க வைத்தது. நிகழ்வு முடிவில் 'எந்த நிலையில் நானிருந்தாலும் என்னை வெறுக்காதவர் இயேசு ஒருவரே' என்ற பாடல் ஒலிபரப்பப்பட்டது, 'ஏற்புடைமை' வாழ்வுக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர் இயேசு ஒருவர்தான் என்பதைப் படம் பிடித்துக் காட்டியது.

### ஏற்புடைமை எல்லா நிலையிலும் சாத்தியமா?

'மனித நேயம் மத்தி (center), மற்ற நற்பண்புகள் அதைச்சுத்தி' என்ற பொதுக் கண்ணோட்டம் இன்று பலரால் கேலிக்குறியாக......... கேள்விக் குறியாகக் கருதப்படுகிறது. ஏனெனில் 'கேடகம் தரும் ஊடக சூழலில்' வாழ்கின்ற நமக்கு, விதிகளே வாழ்க்கையாகி விட்டது. நல்ல இலக்கு, கொள்கை, கோட்பாடு ஆகியவற்றைத் தாண்டி இன்னன்னவை இந்த அளவுக்கு இருந்தால்தான் நான் ஏற்றுக்கொள்வேன் என்ற பேரம் எங்கும் மலிந்து கிடக்கிறது. வலிந்து பற்றிக்கொள்ளும் நெறிகேடுகள்தான் இன்று வலிமையாக வாழ்வாரங்களாகக் கருதப்படுகின்றன. யோவான் 1:11ல் கூறியுள்ளதைப் போல "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்குரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை." என்பது இயேசு காலத்துச் சூழலையும், அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவருக்கு எதிராக மேற்கொண்ட அறியாமை, புரியாமை செயற்பாடுகளையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆனால் எவ்வளவோ பண்பாளர்கள் தோன்றி பாருக்கு தம் சான்று வாழ்வு மூலம் பாடம் கற்பித்தவர்கள் வாழ்ந்த பின்னும் "ஏற்புடைமை என்பது இக்காலத்தில் சாத்தியமில்லை" என்பதாகவே தெரிகிறது.

### திரு விவிலிய ஒளியில் ஏற்புடைமை

*ஆண்டவராகிய கடவுளின் வார்த்தையை ஏற்காத ஏவாள் செய்த இழிசெயல் 'விலக்கப்பட்ட மரத்தின் கனியைத் தின்றதும் தன் கணவர் ஆதாமுக்கு கொடுத்ததும் **(தொ. 3:1-7)**

*உடன்பிறந்த ஒரே தம்பியின் காணிக்கையை ஏற்றுக்கொண்டார் கடவுள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதவனாய் காயின் ஆபேலைக் கொன்றான். **(தொ 4:8-12)**

*கனவுப் பித்தன் என்று கூறி உடன்பிறந்த சகோதரன் யோசேப்பை ஒழித்துக்கட்ட உடன்பட்ட ஏற்புடைமையற்ற உடன் பிறப்புக் கும்பல் செய்த செயலை என்னென்பது? **(தொ 3:19-20)**

*பிள்ளைப்பேறற்ற அன்னா தம் கணவர் எல்கானா மற்றும் சக்களத்தி பெனின்னாவால் ஏற்றுக்கொள்ளாத நிலை **(1 சாமு 1:4-6)**

*இறைவாக்கினர் எலிசாவின் வாக்கினை ஏற்றுக்கொண்டால் பூரண உடல் நலம், இல்லையேல் தொழுநோய் தொடரும் என்ற நிலையில் சிரியா மன்னனின் படைத்தளபதி நாமான் ஏற்புடைமைக்குச் சான்றாகத் திகழ்கிறார். **( 2அர 5: 14)**

*தீமையை நேசித்து தூய்மையை (நன்மையை) தூக்கித்து ஆமான் அழிந்தான் **(எஸ்தர் 7:9-10)**

தம் பணிக்கு வரத் தயங்கி ஏற்புடைமையைக் காட்டாத பலரையும் இறைவன் நெறிப்படுத்தி அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்தார். **(3:7-13) (மோசே) எசா 6:5-8) (எசாயா): எரே: 5-10 (எரேமியா), லூக் 1:31-38 (மரியா)**

*பாதையை மாற்றி, இயேசுவோடு பயணித்த பலருண்டு. **லூக் 19:1-10 (சக்கேயு) மத் 9:9 (மத்தேயு) திப 9:1-9** (பவுல்) இவர்களது ஏற்புடைமை இயேசு காட்டிய விடுதலையின் வெளிச்சமாக அமைந்தது.

*உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இருந்தால் அவ்வீட்டில் இருந்து வெளியேறும் போது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். **(மத் 10:14)** என்று தம் திருத்தூதர்களுக்கு இயேசு கட்டளையிடுகிறார்.

இப்படி ஏற்புடைமையின் பல பரிணாமங்களைத் திரு விவிலியம் படம் பிடித்துக்காட்டுகிறது. கண்ணை மூடிக் கொண்டு கண்டவற்றுக்கெல்லாம் செவிசாய்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கடவுள் விரும்பவில்லை. ஒருவரது குரலை ஏற்கவும் மறுக்கவும் அவர்களுக்கு சுதந்திரத்தை, உரிமையை, ஞானத்தைக் கடவுள் அனைவருக்கும் கொடுத்துள்ளார்.

## மாற்றிக்கொள்ள வேண்டிய ஏற்றுக்கொள்ளாமை

அது அலைபேசி அறிமுகமில்லாத காலம். ஒருவர் சுமார் 50 இலட்சம் ரூபாய் (10,000 யூரோ) மதிப்பீட்டில் புதிய வீடு கட்டி கிரஹப்பிரவேசம் (புதுமனை புகுவிழா) நடத்திவிட்டார். அவருக்கு ' தன் வீட்டிற்கு வருவோர் எல்லாம் எவற்றையோ பெற்றுக்கொண்டு போகத்தான் வருகிறார்கள்' என்ற சிந்தனை எழும். ஒருநாள் ஒரு மனிதன் அவரது வீட்டின் வேலிக் கதவோரம் நின்று கொண்டிருந்தான். அவன் தன் வீட்டுக்கு வருவதை ஏற்றுக்கொள்ள விரும்பாத அந்த வீட்டின் உரிமையாளர் சற்று நேரம் நின்று பார்த்துவிட்டுப் போய் விடுவான் என்று நினைத்து, லான்ட் லைன் தொலைபேசியில் 25 நிமிடங்கள் கத்திப் பேசினார். அவன் போவதாயில்லை. ஓங்கி அடித்து அத்தொலைபேசியை அதன் இடத்தில் வைத்துவிட்டு நிமிர்ந்தார். அந்த ஆள் வீட்டின் உள்ளே அவர் அருகில் வந்துவிட்டான். சற்று கோபமாக "உனக்கு என்னப்பா வேணும்?" என்றார். அதற்கு அந்த மனிதன் "உங்களது தொலைபேசிக்கு இணைப்புக் கொடுத்துவிட்டு வரும்படி எங்கள் அலுவலகம் என்னை அனுப்பியுள்ளது" என்றான். "அப்படியா! உடனே இணைப்பைக் கொடப்பா என்றார்" வெட்கத்துடன். அவன் பணியை முடித்தவுடன் அவனுக்கு ரூபா 100 கொடுத்தார். அவன் பெற்றுக்கொள்ளாமல் போய் விட்டான். ஆம் ஏற்றுக் கொள்ளாமையினால் பலர் அரிய கொடைகளைக் கூட இழந்துள்ளனர்.

## ஏற்புடைமை கற்பிக்கும் இனிய பாடங்கள்

**இறை திருவுளத்தை ஏற்றல்:-** நம்மை மேலான நோக்கத்தோடு படைத்த இறைவன், தம் திருவுளத்தை நிறைவேற்றும் கருவியாகக் கருதி நமக்குப் பல அனுபவங்களை அளிக்கின்றார். இதனை இயேசுவே நமக்கு தமது கெத்சமனித் தோட்ட அனுபவத்தில் வெளிப்படுத்துகிறார். (லூாக் 22:42)

**நிலை மாற்றம் பெற்று நிறை வாழ்வைக்காட்ட :-**
லெரேட்டா சபையின் ஒழுங்குகளை ஏற்று துறவியான திரேசா அழைப்புக்குள் அழைப்புப் பெற்று அகிலம் போற்றும் அன்னை திரேசா ஆக மாறினார். அவர் பெற்ற இந்த நிலை மாற்றம் இயேசுவை முழுமையாக ஏற்றுக்கொண்டதன் நோக்கத்தை வெளிப்படுத்தியது.

**அனைவரும் இறைவனின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டவர்கள்.**

மானிடர் அனைவரும் சமமானவர்கள். அவர்களுக்குள் காணப்படும் வேறுபாடுகள் குறை-நிறையின் வெளிப்பாடுகள் அல்ல, நிறம், இனம், மொழி, அமைப்பு, வசதி, நாடு, பிறப்பு, கல்வி (பட்டம்-பதவி) இவை அனைத்தும், ஒருவரை ஏற்பதற்கும், மறுப்பதற்கும் காரணமாகிடக்கூடாது. ஏனெனில் ஒவ்வொரு நாளும் நிலை மாறும்! நிலைமை மாறும். 'மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்கும் என்று கடவுள் நினைப்பதுண்டு பாவம் மனிதன் என்று' எனப் பாடல் ஒன்று உள்ளது.

**விதிகள் மாற்றத்திற்குரியவை :-**
அழகு, அறிவு இருந்தால் மட்டுமே, குறிப்பிட்ட இனத்தில் பிறந்திருந்தால் மட்டுமே,.....படிப்பு....... பதவி இருந்தால் மட்டுமே, குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே என்று விதிகளை விதித்து, தனது ஏற்புடைமையை வெளிப்படுத்துபவர்கள், வெகு விரைவில் ஏமாற்றம் அடைவர் என்பது, பலரது அனுபவங்கள் கற்பிக்கும் பாடமாகும்.


**ஏற்புடைமையால் நிலைத்திருக்கும் இளையோர் இறைவனின் அருள்.**
இளையோருக்காக திருத்தந்தை பிரான்சிஸ் எழுதிய **கிறிஸ்து வாழ்கிறார்** என்ற இளையோருக்கான ஆவணத்தில்..... ' இளையோரே! நீங்கள் நிகழ்காலம். உங்களது தேர்ந்த தெளிதலாலும், ஏற்புடைமையாலும் புதியதோர் உலகத்தைப் படைக்கவும், அதில் புதுமையாகப் பயணிக்கவும் முடியும். உங்களது பொறுப்புள்ள பயணம் பலரது விடியலுக்கு வழிவகுக்கும்' என்கிறார். நீங்கள் ஏற்புடைமையால் தூய ஆவியாரின் துணைகொண்டு ஆய்ந்து செயல்படுங்கள், செல்வாக்குப் பெறுவீர்கள். !








### 12 திருத்தந்தையர் சிலுவை




மூன்று குறுக்கு சட்டத்தைக் கொண்ட சிலுவையாகும். திருத்தந்தை உரோமை மறைமாவட்ட ஆயர், மேற்கத்தைய மறைத்தந்தை, திருத்தூதர்களின் முதல்வராக தூய பேதுருவின் பிரதிநிதி என்ற திருத்தந்தையின் மூன்று நிலைகளைக் குறிக்கின்றது.



### 13 தாவே சிலுவை


வாழ்வைக் குறிக்க எகிப்து மக்களிடையே காணப்படும் சிலுவையின் வடிவமே தாவே சிலுவையாகும்.

### 14 பிரஸ்பிற்றெரியன் சிலுவை



பிரஸ்பிற்றெரியன் சபையில் பாவிக்கப்படும் சிலுவையாகும்.

### 15 மரியா சிலுவை




மரியா சிலுவை அறிமுகப்படுத்தியவர் திருத்தந்தை 2 யோவான் பாவிலு. நீண்ட கரத்தையுடையதாகவும் அதன் கீழ் அன்னை மரியாவைக் குறிக்கும் அட்சரத்தை குறித்துள்ள சிலுவையாகும்.

### 16 மறைத்தந்தையர் சிலுவை



வழமையாக சிலுவையில் மேலதிகமான குறுக்கு சட்டம் உள்ளதாகும். மரபு மாறாத் திருச்சபையின் அனைத்துப் பேராயர்களையும் மறைத்தந்தையர்களையும் இச்சட்டம் குறிக்கின்றது. கிரேக்க மரபு மீறாத் திருச்சபையின் சிலுவையில் அடிப்பக்கத்தில் குறுக்கு சட்டம் உள்ளது.



### 17 பேதுரு சிலுவை

தலைமைத் திருத்தூதுவர் தூய பேதுரு தாழ்மையினால் தன்னை தலைகீழாக சிலுவையில் அறையும்படி கேட்டதாகக் கத்தோலிக்க பாரம்பரியம் உள்ளது.

## ஈழத்தின் கத்தோலிக்க செய்திகள்



### கச்சத்தீவு வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு....

யாழ்ப்பாணம் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு 12. 03. 2022 சனிக்கிழமை காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நேற்று கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூபப் பவனி ஆகியன இடம்பெற்றன. இத்திருவிழாவிற்கு இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே வருகை தந்ததுடன், குறித்த நிகழ்வில் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

மேலும் இவ் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந் நிகழ்வில் வடமாகாண கடற்படை தளபதி பிரியந்த பெரேரா, ஓய்வுபெற்ற கடற்படை தளபதி அட்மிரல் விஜேகுணரட்ண, யாழிற்க்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிகக்கார, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கே. விமலநாதன், நெடுந்தீவு பிரதேச செயலர் சத்தியசோதி மற்றும் மதகுருமார்கள், கடற்படை இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் பக்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.




# சிலுவையின் வடிவங்கள்

### 1 அந்திரேயாச் சிலுவை



பன்னிரு திருத்துர்தர்களில் ஒருவரான துாய அந்திரேயா துாய பேதுருவின் உடன் சகோதரா். இவர்களின் தந்தை செபதேயு. சின்ன ஆசியா, கிரேக்கப் பகுதிகளில் நற்செய்தி அறிவித்ததாகவும் பின்னர் ஆசியா பகுதியிலுள்ள பத்திரோ உரோமை அதிபதி ஆக்கியஸ் கட்டளைப்படி இலத்தின் எண் கணக்கு பத்தைக் குறிக்கும் X வடிவமான சிலுவையில் அறையப்பட்டார் என்ற பூர்வீகம் உள்ளது.

### 2 அந்தோனி சிலுவை



இதை எகிப்திய சிலுவை எனவும் அழைப்பர். கிறிஸ்தவ துறவறத்தின் தந்தையான துாய அந்தோனி பாவித்த சிலுவையாகும்.

### 3 இலத்தீன் சிலுவை



ஆண்டவரின் இரட்சணியத்தை குறிக்கும் கிறிஸ்தவ சிலுவையாகும்.


### 4 கிரேக்க சிலுவை



நாலு கரங்களும் சம அளவிலான வடிவமுள்ள சிலுவையை கிரேக்க சிலுவை என அழைப்பர்.

### 5 கிழக்கத்தைய சிலுவை.

கிழக்கத்தேய மரபுமீறாத் திருச்சபையின் சிலுவையாகும். மேல் சட்டம் தலை சாய்ப்பிடமாகவும் சரிவான கீழ் சட்டகம் கால்வைப்பிடமாகவும் உள்ளது. பிரதான சட்டத்தின் முடிவில் காணப்படுகின்ற **IC, XC** கிரேக்க அட்சரங்களான கிறிஸ்துவைக் குறிக்கின்றது.





### 6 கைச் சிலுவை



கீழைத்தேய சடங்குப் பூர்வீகத்தில் ஆயர்களும் குறிப்பாக சிரிய, மரணேயிட் மற்றும் ஆர்மீனிய குருக்களும் வழி–பாட்டிலோ அல்லது மேலதிக வழிபாட்டின் போதோ கைச் சிலுவையால் ஆசீர்வதிக்கும் வழக்கம் உள்ளது.

### 7 கொப்ரிக் சிலுவை



எகிப்திலுள்ள அலெக்ஸ்சாண்டிரியப் பகுதிகளில் உள்ள திருச்சபையை கொப்ரிக் திருச்சபை என அழைப்பர். கொப்ரிக் என்றால் அரபிய மொழியில் திருச்சபையைக் குறிக்கும். நாலு கரங்களும் சம அளவிலான வடிவமுள்ள சிலுவையாகும். இதன் நாலு மூலைகளிலும் ஆண்டவரின் திருக் காயத்தை பிரதிபலிக்கும் நான்கு ஆணிகளின் வடிவம் உள்ளது.

### 8 சிலுவை போர்வீரர் சிலுவை அல்லது யெருசலேம் சிலுவை.



கிட்டத்தட்ட 200 ஆண்டு கால வரலாறு உள்ள யெருசலேம் சிலுவைப் போராளிகளின் அரசின் அடையாள மாகும். நாலு சிறிய சிலுவைகளும் நாலு நற்செய்தி அல்லது யெருசலேமி லிருந்து இறைவார்த்தை நான்கு திசைகளிலும் சென்றதை அடையாளப் படுத்துவதாகச் சொல்லுவர். இதிலுள்ள ஐந்து சிலுவைகளும் ஆண்டவரின் ஐந்து காயங்களை குறிப்பதாகச் சொல்லுவர்.

### 9 செல்ரிக் சிலுவை



4ம் நூற்றாண்டுக்குப் பின் ஐரோப்பாக் கண்டத்தில் பல நாடுகளுக்கு திருச்சபையில் மறைபரப்புப் பணியை பல துறவற சபைகளே மேலெடுத்தது. துறவற மடலாயங்கள் ஐரோப்பாவின் கல்வி, மற்றும் விவசாய மறுமலர்ச்சிக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கும் துறவற மடங்களே உந்துசக்தியாக விளங்கின. இங்கிலாந்து அயர்லாந்தின் பல. இடங்களில் துறவற மடங்கள் ஆரம்பிக்கப்பட்டு மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து நாடுகளில் பின்னரே அமைப்பு முறையிலான திருச்சபை உருவானது. இத் திருச்சபைகளை செல்றிக் சபைகள் என அழைப்பர். செல்றிக் முறை பண்பாட்டு வடிவமான சிலுவை பாவனைக்கு இருந்துள்ளது. இச் சிலுவையை முயர்டாக் சிலுவை என அழைப்பர்.

### 10 சிரிய சிலுவை



### 11 மேற்கத்தைய சிரிய திருச்சபை சிலுவை.



இயேசுக் கிறிஸ்துவின் இறை இயல்பை மட்டும் ஏற்றுக்கொள்ளும் ஓரியல்பினரான சீரிய கிறிஸ்தவர்கள் பல வடிவங்களில் சிலுவையை அமைத்தனர்.



# புனித அந்தோனியார் (ஆனி 13)



போர்த்துக்கல் நாட்டின் தலைநகரம் லிஸ்பன் வரலாற்றுச் சிறப்புக் கொண்டது. அங்கிருந்து தான் கார்மேகங்களுக்கிடையில் தோன்றிய விடிவெள்ளி போன்று 1195 ஆகஸ்ட் திங்கள் 15ம் நாள் அன்னை விண்ணேற்பு நன்னாளில் மார்த்தீன், மேரி என்ற செல்வந்த குடும்பத்தில் 3றாவது பிள்ளையாகப் பிறந்தார் அந்தோனியார். அவரது ஞானஸ்நான பெயர் பெர்டினான்ட். பெற்றோரைப் போல குழந்தையும் சிறு வயதிலிருந்தே இறைப்பற்றிலே திளைத்து, நற்குண சீலராக வளர்ந்து வந்தார். சிறுவன் பெர்ணாண்டு ஒரு நாள் மேற்றிராசன ஆலயத்தில் உருக்கமாக செபித்துக் கொண்டிருக்கும்போது, தீடிரென்று பயங்கர உருவத்தில் அலகை தோன்றியது. சிறுவன் அஞ்சி ஓடவில்லை. மனத்துணிவுடன், தான் முழந்தாளிலிருந்த சலவைக் கல்மேல் திருச்சிலுவை அடையாளத்தை வரைந்தான். பிசாசு வெகுண்டு ஓடியது.

15 வயதில் தேவ அழைத்தலை உணர்ந்து லிஸ்பனிலுள்ள புனித அகுஸ்தினார் சபையில் சேர்ந்தார். கூரிய நுண்ணறிவு படைத்த பெர்டிணாண்டு திறம்படக் கல்வியில் தேர்வு பெற்றார். வேதாகமப் படிப்பிலும் திருச்சபை தந்தையர்கள் பற்றிய அறிவிலும் 8 வருடங்கள் செலவிட்டார். 1221ஆம் ஆண்டு புனித அகுஸ்தீன் சபையை விட்டு விலகி பிரன்சீஸ்கன் சபையில் சேர்ந்தார். இச்சபையில் தனது பெயரை “ அந்தோனியார்” என்று மாற்றினார்.

போர்லி என்ற இடத்தில் 1219ம் ஆண்டில் 24 ஆம் வயதில் குருப்பட்ட நிகழ்ச்சி நடந்தது. வழக்கமாக அங்கிருந்த பிரான்சிஸ்கன், சாமிநாதர் சபையோரின் உறுப்பினர்களுக்கு பிரசங்கம் நடைபெறுவது வழக்கம். வந்திருந்தவர்கள் பிரான்சிஸ்கன் சபையிலிருந்தோ, சாமிநாதர் சபையிலிருந்தோ எவரும் தகுந்த தயாரிப்பில்லாததால் போதக மேடையில் ஏறத் தயங்கினர். மடத்துத்தலைவர் ஆணையிட அந்தோனியார் பணிவுடன் மேடை ஏறி மடைதிறந்த வெள்ளம் போல சொற்கள் பொழிந்தார். உள்ளத்தை ஊடுருவும் ஆழ்ந்த கருத்துக்கள்! சொல்நயத்தால் கேட்டவர்களை காந்தம்போல் கவர்ந்தார்: அன்றுமுதல் அந்தோனியார் புகழ் பெற்ற பிரசங்கியானார். அதன்பின் பதுவை நகரில் திருமறையாற்றி பேரிடி முழக்கம் செய்தார். இதிலிருந்து அவரது போதகப் பணி ஆரம்பமானது.

தம் பிரசங்கத்தால், தப்பறைக் கொள்கை வாதிகளுக்கு பூகம்பமானார். கனமான பாவிகளை மனமாற்றினார். ஒரு சமயம் பெரிய மழை வருவதாக அறிகுறி தெரிந்தது. ஜனக்கூட்டம் பயந்தது. “ அஞ்சவேண்டாம் அப்படியே அமைதியாக இருந்து கேளுங்கள்” என்று கூறித் திருவுரையாற்ற, சுற்றிலும் மழைபொழிய பிரசங்கம் நடந்த இடத்தில் மட்டும் ஒரு சொட்டு நீர் கூட விழாமல் புதுமையாகப் பெய்தது. வேறொரு சமயம் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது “ இப்போது சாத்தான் ஒரு தீமை செய்யக் காத்திருக்கிறான். எனினும் நீங்கள் அஞ்சவேண்டாம்” என்று கூட்டத்தைப் பார்த்துகூற, சிறிது நேரத்தில் மேடை சரிந்து விழுந்தது. இதனால் அந்தோனியாருக்கோ, கூட்டதினருக்கோ எவ்வித ஆபத்துமில்லை.


ஆல்பிஜென்ஸியர் என்ற தப்பறைக் கொள்கையினர் தங்களுக்கு சரியான புத்தி புகட்ட வந்த போதகர்களை அடித்து கொடுமைப்படுத்திய காலத்தில், அந்தோனியார் அவர்களை நாடிச் செல்லவே, அவரது போதனையை எவரும் செவிமடுக்க முன் வரவில்லை. ஒரு பக்கம் கடல் மறு பக்கம் ஆறு. நடுவிலுள்ள மைதானத்தில் போதிக்க ஆரம்பித்தார். மீன்களே இறைவாக்குக்கு செவி மடுங்கள்” என்றார். புதுமை நிகழ்ந்தது. இரண்டு இடங்களிலுமுள்ள மீன்கள் சிறியன முன் வரிசையிலும், பெரியன பின் வரிசைகளிலும் நின்று செவிமடுத்தன. இதைக் கண்டு வெட்கி மாந்தர் முன் வந்து போதனைக்கு செவி சாய்த்தனர். 1231 யூன் 13 அன்று நோயுற்றார். ஒப்புரவு அருட்சாதனமும், இறுதி வழி உணவும் பெற்றார். இதற்கு முன் மரியன்னையின் பேரில் அவருக்கு பிடித்தமான ஒரு பாடலைப் பாடினார். உடலில் ஒளி பரவியது.

வாழ்நாளில் பல சர்ச்சைகளைத் தீர்த்து வைத்தார். இவரின் இறப்புக்குப் பின் சடலத்தை எங்கு வைப்பது என்ற சர்ச்சைகள் எழும்பியது. கிளாரா மடத்தினர் தங்கள் மடத்தில் அடக்கம் செய்ய வேண்டுமென்றனர். பதுவையர்கள் தங்கள் நகரில் புதைக்கப்பட வேண்டும் என்றனர். இறுதியில் பிரான்சிஸ்கன் கல்லறைத் தோட்டத்தில் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அன்றே ஊமைகளை பேசச்செய்தும், செவிடர்களை கேட்கச் செய்தும், முடவர்களை நடக்கச்செய்தும் புதுமைகள் ஆற்றினார். பிற்காலத்தில் உடலைத் தோண்டி எடுத்து பதுவையில் இடமாற்றம் செய்ய முயல்கையில், உடல் எல்லாம் அழிந்திருக்க **நாக்கு** மட்டும் அழியாதிருந்தது. அதை இன்றும் காணமுடியும்.

நாளாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட நாளாகியது. குழந்தைப் பேறில்லாத ஒருபெண் கோவிலுக்குச் சென்று அந்தோனியார் சுரூபம் முன் உருக்கமாக 9 செவ்வாய்க் கிழமைகள் செபித்தாள். கேட்டபடி குழந்தை வரம் அருளப்பட்டது. ஆனால் குழந்தை அங்கவீனமாகப் பிறந்தது. அதனை அவர் பாதம் கிடத்தி அங்கவீனம் போய்விடட்டும், இவனை குருவாக அர்ப்பணிக்கிறேன்” என்று மீண்டும் செபித்தாள். குழந்தையை துாக்கிப் பார்த்தபோது அங்கவீனம் போய் விட்டது. பிற்காலத்தில் 9 என்பது 13 செவ்வாய்க் கிழமைகளாக மாறியது.

தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்பிற்குப் பின்னும் கடவுள் அளித்த கொடையினால் அனேக புதுமைகள் செய்தார். இதனால் ‘ கோடி அற்புதர் புனித அந்தோனியார்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். வாழ்ந்த காலத்தில் கடவுளுடைய கிருபையால் இவர் செய்த புதுமைகளால் இவரை நாடிவருவோர் அதிகமாயிற்று. ஒரே நேரத்தில் அந்தோனியார் இரு இடங்களில் போதித்ததாகவும், புதுமைகள் செய்ததாகவும் வரலாறு உண்டு. படங்களில் அவரது கையில் குழந்தை இயேசுவும், மற்றொரு கையில் திருமறை நூலை வைத்திருப்பதைக் காணலாம். காணமல் போன பொருட்களை புனித அந்தோனியாரை நினைத்து மன்றாடினால் கிடைக்கிறது என்ற விசுவாசம் இன்றும் மக்களிடம் காணப்படுகிறது. "கோடி அற்புதர்" "பதுவை பதியர்" "பசாசுகளை நடு நடுங்கச் செய்பவர்" "காணாமல் போனவைகளை கண்டுபிடித்துக் கொடுப்பவர்" போன்ற அடைமொழிகளும் புனித அந்தோனியாருக்கே சொந்தம். தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்பிற்குப் பின்னும் கடவுள் அளித்த கொடையினால் அனேக புதுமைகள் செய்தார். இதனால் ‘ கோடி அற்புதர் புனித அந்தோனியார்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். வாழ்ந்த காலத்தில் கடவுளுடைய கிருபையால் இவர் செய்த புதுமை–களால் இவரை நாடிவருவோர் அதிகமாயிற்று.




ஆண்பால்-பெண்பால்- பலர்பால்

அப்பா சந்தைக்குச் சென்றார்.
அம்மா காய்கறிகள் வாங்கினார்.
பெற்றோர் அறிவுரை கூறினர்.

சிறுமி நடனம் ஆடினாள்.
சிறுவன் கைகளைத் தட்டினான்.
சிறுவர்கள் சிரித்து மகிழ்ந்தனர்.

பேரன் ஓவியம் வரைந்தான்.
பேர்த்தி தண்ணீர் பருகினாள்.
பேரப்பிள்ளைகள் வீட்டிற்கு வந்தனர்.

தோழன் கேள்விகள் கேட்டான்.
தோழி விடை கூறினாள்.
தோழர்கள் வேடிக்கைப் பார்த்தனர்.

வான்மதி நூலகம் சென்றாள்.
முகிலன் வரிசையில் நின்றான்.
ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பித்தனர்.

5.3.2 - ஆண்பால், பெண்பால், பலர்பால் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு
- வாசிப்புப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- வாக்கியங்களில் உள்ள ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களைக் கண்டறிந்து வாசித்தல்.
- வேறு ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்களைப் பட்டியலிடுதல்.

நடவடிக்கை நூல் பக்கம் : 70

வணக்கம்,

எனது பெயர் சுதிஷா
எனது அப்பாவின் பெயர் சுதாகரன்
எனது அம்மாவின் பெயர் ஜஸ்மிக்குரூஸ்
எனது வயது 14.
எனக்கு இரண்டு சகோதரிகள் உண்டு.
எனது பொழுது போக்கு பாடல் நடனம் மற்றும் சித்திரம்.
நான் College இல் பயில்கிறேன்.
எனக்கு பிடித்த பாடம் கணிதம்.
நான் Neuilly Sur Marne பங்கு கோவிலில்
பாடகர் குழாமில் ஒரு அங்கத்தவராய் உள்ளேன்.

நன்றி.



எனது பெயர் ஜெபினா.
எனது அப்பாவின் பெயர் பேணாட்.
எனது அம்மாவின் பெயர் ரோனா.
எனது வயது 12. எனக்கு இரண்டு
சகோதரர்கள் ஒரு அண்ணா ஒரு அக்கா.
நான் collègeயில் படிக்கிறேன். நான்
தமிழ்சோலையில் படித்தனான்.
எனக்குப் பிடித்த பாடம் French, English.



எனது பெயர் விஜானா.
எனது அப்பாவின் பெயர் தேவநாயகம்.
எனது அம்மாவின் பெயர் ஜெனட்.
எனது வயது 12.
எனக்கு இரண்டு தங்கைகள் உண்டு
வைஷ்ணா, தெஷ்னா.
நான் collège இல் படிக்கின்றேன்.
எனக்கு பிடித்த விளையாட்டு tennis.
நான் piscineக்கும் போகின்றனான்
எனக்கு பிடித்த பாடம் கணிதம்.
எனக்கு piano மிகவும் பிடிக்கும்.



**சின்னக் கரங்களே!**

**இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கையால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்……**





# அருளாளர் தேவசகாயம் பிள்ளை (தை 14)



* பிறப்பு: ஏப்ரல் – 27 – 1712 பள்ளியாடி, நட்டாலம், கன்னியாகுமரி மாவட்டம், திருவாங்கூர் அரசு, இந்தியா

* இறப்பு : ஜனவரி 14, 1752 (வயது 39) ஆரல்வாய்மொழி, திருவாங்கூர் அரசு, இந்தியா.

* சித்தரிக்கப்படும் வகை : சங்கிலியால் கட்டப்பட்டவாறு.

முக்திப்பேறு பெற்ற தேவசகாயம் பிள்ளை (Blessed Devasahayam Pillai) இன்றைய குமரி மாவட்டத்தின் நட்டாலம் கிராமத்தில் 1712ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 23ம் நாள், நாயர் குல இந்து குடும்பத்தில் பிறந்து, கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி மறைச்சாட்சியாக உயிர்துறந்தார். அவரது இயற்பெயர் நீலகண்ட பிள்ளை ஆகும். கத்தோலிக்க திருச்சபையில் திருமுழுக்கு பெற்றபோது அவருக்கு "கடவுளின் கருணை" என்னும் பொருள்படும் "லாசரஸ்" (Lazarus) என்னும் பெயர் வழங்கப்பட்டது. அதுவே தமிழில் "தேவசகாயம்" என்று வழங்கப்படுகிறது.

இவர் கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் ஒரு மறைசாட்சியாக (Martyr) கருதப்படுகின்றார். குமரி மாவட்டத்தில் அமைந்துள்ள கத்தோலிக்க அமைப்பாகிய கோட்டாறு மறைமாவட்ட கிறிஸ்தவர்கள், இவருக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இவர் 1752ம் ஆண்டு, ஜனவரி மாதம், 14ம் நாள், ஆரல்வாய்மொழியில் உள்ள காற்றாடி மலை என்னும் இடத்தில் அன்றைய திருவாங்கூர் ஆட்சியாளர்களின் ஆணைப்படி சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் இறந்த இடம் இன்று தேவசகாயம் மவுண்ட் என்றும், ஆரல் குருசடி என்றும் அழைக்கப்படுகிறது.

அவர் இறந்த இடத்திற்குச் சென்று மக்கள் இறைவேண்டல் நடத்தத் தொடங்கினார்கள். இவ்வாறு, அதிகாரப்பூர்வமாக "மறைச்சாட்சி" என்னும் பட்டம் அவருக்கு வழங்கப்படுவதற்கு முன்னரே பொதுமக்கள் பார்வையிலும் செயல்பாட்டிலும் அவர் மறை சாட்சியாகவே கருதப்பட்டார். கத்தோலிக்க திருச்சபை அதிகாரப்பூர்வமாக அவரை மறைசாட்சி என்றும் "முத்திப்பேறு பெற்றவர்" (mushsu; - Blessed) என்றும் 2012ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 2ம் நாள் பிரகடனம் செய்தது. இந்நிகழ்ச்சி கோட்டாறு மறை மாவட்டத்துக்கு உட்பட்ட நாகர்கோவில் கார்மேல் மேனிலைப்பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடந்தேறியது.

**பிறப்பு :**

மறை சாட்சி தேவசகாயம் பிள்ளை இன்றைய குமரி மாவட்டத்திலுள்ள நட்டாலம் என்னும் கிராமத்தில் 1712ம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 23ம் நாளன்று நாயர் குலத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் நீலகண்ட பிள்ளை என்பதாகும். சிறுவயதிலேயே சமஸ்கிருதம், கலை ஆகியவற்றை படித்து அறிந்தார்.

தொடரும்….




# வத்திக்கான் செய்திகள்

## உக்ரைன் புலம் பெயர்ந்தோரை வரவேற்கும் நாடுகளுக்கு நன்றி

ரஷ்யாவிலிருந்து உக்ரைனுக்கு அனுப்பப்படும் இளைஞர்கள், எங்கிருக்கிறார்கள் என்பது குறித்து தகவல்கள் எதுவுமே தெரியாததால் அன்னையர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

போரினால் துயருறும் உக்ரைன் நாட்டு மக்களோடு திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும், திருஅவையின் உடனிருப்பைத் தெரிவிக்கவும், மனிதாபிமான உதவிகளை ஆற்றவும் உக்ரைன் பகுதிக்குச் சென்றுள்ள கர்தினால் Konrad Krajewski அவர்கள், போருக்குப் பயந்து உக்ரைனிலிருந்து புலம்பெயரும் மக்களுக்கு உதவிவரும் நாடுகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார் மார்ச் 10, இவ்வியாழனன்று, Lviv நகரில் பல்சமய திருவழிபாடு ஒன்றை நிறைவேற்றி அமைதிக்காகச் செபித்த, திருத்தந்தையின் தர்மச் செயல்களுக்குப் பொறுப்பான கர்தினால் Krajewski அவர்கள், மார்ச் 11, இவ்வெள்ளியன்று அந்நகரிலிருந்து Rivne சென்றுள்ளார். உக்ரைன் நாட்டிலிருந்து புலம்பெயரும் மக்களை வரவேற்கும், அதன் அருகிலிருக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு நன்றி கூறிய கர்தினால் Krajewski அவர்கள், பெருந்துயரங்களுக்கு மத்தியில் நம்பிக்கையோடு இருக்குமாறு மக்களை ஊக்கப்படுத்தி, அமைதி குறித்த திருத்தந்தையின் செய்தியையும் வழங்கினார்.

உக்ரைனின் வடமேற்கில் அமைந்துள்ள Rine நகரில் பல்வேறு கத்தோலிக்கக் குழுமங்களைப் பார்வையிட்டுள்ள கர்தினால் Krajewski அவர்கள், திருத்தந்தை உக்ரைன் நாட்டிற்காகத் தொடர்ந்து செபிக்கின்றார். திருத்தந்தையும், உலகமனைத்தும் அம்மக்களோடு உடனிருக்கின்றனர் என்பதையும் எடுத்துக் கூறினார். ரஷ்யாவில் அன்னையர் போராட்டம் இதற்கிடையே, ரஷ்யாவிலிருந்து உக்ரைனுக்கு அனுப்பப்படும் இளைஞர்கள், போரிட அனுப்பப்படுகின்றனரா? என்பது குறித்தோ, அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது குறித்தோ தகவல்கள் எதுவுமே தெரியாததால், அந்த இளைஞர்களின் அன்னையர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.



## 2ம் உலக போருக்கு பின் முதன்முறையாக... மறைவிடத்திற்கு கொண்டு செல்லப்பட்ட இயேசு சிலை

உலக நாடுகளில் ஒரு பகுதியினர் இரு பிரிவுகளாக பிரிந்து, கடந்த 1939ம் ஆண்டு முதல் 1945ம் ஆண்டு வரையான காலகட்டத்தில் 2ம் உலக போர் நடந்தது. இந்த போரின்போது, உக்ரைனின் வீவ் நகரில் உள்ள ஆர்மீனியன் சர்ச் ஒன்றில் இருந்த இயேசு கிறிஸ்துவின் சிலை, குண்டுவீச்சு உள்ளிட்ட தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் வகையில் ஆலயத்தில் இருந்து நீக்கப்பட்டு மறைவிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த நிலையில், உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கையாக கடந்த 12 நாட்களாக ரஷிய ராணுவம் போரில் ஈடுபட்டு வருகிறது. இப்போது, 2ம் உலக போருக்கு பின் முதன்முறையாக உக்ரைனின் வீவ் நகரில் இருந்து இயேசு சிலையை மறைவிடத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். இதனை கிழக்கு ஐரோப்பிய ஊடக அமைப்பு நெக்ஸ்டா இன்று தெரிவித்து உள்ளது.